முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 4—9—5௯ | வெள்ளி | ஒலி: 20



டெல்லி மந்திரிசபையிலிருந்து உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் ராஜினாமா செய்ததும்; தொடர்ந்து பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனனை விலகப்போவதாக வந்த செய்தியும் பண்டிதரின் உள்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட குழப்பத்தைக் காட்டுகிறது.

சோகச் சிறுகதைகள் முடியுமா?

'குற்றவாளிகள் நடத்துகிற ஆட்சிதான் மூவண்ணக் கொடியேந்திகளின் ஆட்சி'—என்று ஒரு பத்திரிகை ஆசிரியன் குறிப்பிட்டது நூற்றுக்கு நூறு உண்மையென நிரூபித்து வருகிறார்கள், நாடாளுபவர்கள். ஆட்சி செலுத்தும் முறையாகட்டும், அரசியல் விவகாரங்களாகட்டும் அவர்கள் தொட்ட இடம் குஷ்டரோகி தொட்ட இடமாகத்தான்—மனதுக்கு அருவருப்பு தருகிற வகையில்தான் இருக்கிறது.

திறன்படைத்த அவர்களுக்கு இந்தக் காலரா நோய் எம்மாத்திரம்?'—என்று நம்பிக்கைச் சொற்களைப் பேசினான். அந்தப் பேதைப் பெண்ணும் 'கணவன் நோய்ப் படுக்கையிலிருந்து எழுவான்! மலர்ப்படுக்கையில் மண வாழ்வு தொடங்குவான்' என்று எண்ணினாள்.

எப்படியோ மருத்துவமனைக்கு அவன் கொண்டு போகப்பட்டான். தன் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று நம்பிக்கையைக் கூறினாள்; 'பைத்தியம்'—என்ற பட்டம் வாங்கிக் கொண்டாள்.

அதற்குள் வாய்க்கட்டுக் கட்டிக் கொண்டு டாக்டர்கள் உள்ளே புகுந்து கதவை அடைத்துக் கொண்டார்கள். கத்தியும், கத்தரியும் தயாராயின. உயிரோடு இருப்பவனின் வயிற அறுத்து, எப்படிச் செத்தான் என்று பார்க்க முனைந்தனர்!

ஆனால்.........அறுக்கப்போகும்

கிருஷ்ணமேனன் பதவியேற்றதிலிருந்து வளர்ந்து கொண்டேயிருக்கிறது! ஊழலுக்கு மிகப் பாதுகாப்பான இடம் பாதுகாப்பு இலாகாவே என்று எண்ணும்படி நிலைமை இருக்கிறது.

இராணுவத்தினரின் பண்ணைகளுக்காக 'பால் பாதுகாக்கும் இயந்திரங்கள்' வாங்கப்பட்டனவாம். அவற்றின் மதிப்பு, 3,80,000.

★ சீழ்நாறும் ஊழல் நிற்குமா? ★

ஆங்கிலேயன் நிர்வாகத்தை அரைக் காசுக்கு உதவாத நிர்வாகம் — பிரித்தாளும் குள்ளநரி ஆட்சி என்று வர்ணித்த இவர்கள் ஆட்சியையும் நிர்வாகத்தையும் நோக்கும்போது, அவன் ஆட்சி ஆயிரம் மடங்கு உயர்ந்தது என்று எண்ணிடத் தோன்றுகிறது.

அலட்சியமும், ஆணவமும் நிர்வாகத் துறையிலே தலைதூக்கின. கண்டிப்பான நிர்வாகிகளைக்கூட அமைச்சர்களின் தலையீடு, உற்சாகமிழக்கச் செய்தது.

தீ வைத்த காங்கிரஸ் எம்.எல்.ஏ—க்களுக்கு மன்னிப்பு!

அதிகாரியை உதைத்த பெரும் பணக்காரருக்குக் காங்கிரஸ் தேர்தல் டிக்கட்!

கூட்டுறவு ஸ்தாபனத்தின் கதவுடைத்து உட்புகுந்த பலாத்காரவாதிக்கு—காங்கிரஸ் எம். எல். ஏ-க்கு மந்திரிகளின் அரவணைப்பு.

இப்படி ஊருக்குஊர் நிர்வாகத்தையும், நீதியையும், குலைத்த காங்கிரஸ் அமைச்சரவை, குற்றவாளிகளை மட்டுமா திரம் தன் தோழர்களாக வைத்துக் கொள்ளவில்லை! நிர்வாகத்தில் அலட்சியத்தை விதைக்கத் துணை புரிந்தனர். தவறுகளின் எண்ணிக்கை, 'தவறு செய்கிறோமே' என்ற அச்சத்தை விரட்டி, தவறு செய்வதில் தவறில்லை — என்கிற மனப்பான்மையை நிர்வாகத்திலே வளர்த்துவிட்டது. வேண்டாத இந்த மனப்பான்மையால் பாதிக்கப்பட்டோரின் கதை நாள்தோறும் வளர்ந்து வருகிறது.

அண்மையில் ஒரு சேதி கிடைத்தது. அதைப் படிக்கும்போது—திருப்பித் திருப்பிப் படிக்கும்போது நிர்வாகத்திலே உள்ள கவனக் குறைவு நமக்கு சினத்தையும் அதே நேரத்தில் வருத்தத்தையும் தோற்றுவிக்கிறது.

அவன் நோயாளி. காலரா நோயாளி. கண்கள் குழிவிழுந்து கைகால்கள் உணர்விழந்து கிடக்கிறான். கட்டிய மனைவி மெல்ல அழுகிறாள், 'நான் கட்டிய மனக்கோட்டைகள் மணற்கோட்டைகளாயினவே!'-என்று! மறைவாக முந்தானையில், கண்ணீரைத் துடைத்துக் கொண்ட மனைவியைப் பார்க்கிறான், கணவன்.

'அழாதே பெண்ணே! எனக்கு இன்னும் வாழ்விருக்கிறது. உனக்கு இன்னும் மணமிருக்கிறது. டாக்டர்கள் என்னைப் பிழைக்க வைத்து விடுவார்கள். இதயத்தை வெளியே எடுத்து, வேறு இதயத்தை வைக்கும்

பினான்; களைப்பினால் கண்ணயர்ந்தபடியே இருந்தான். அவன் மனைவியின் உள்ளத்திலும் நம்பிக்கை ஊற்று சுரந்தது.

கண்மூடிய அவனை ஸ்டெரச்சரில் பாடைதூக்குவதுபோல தூக்கிக் கொண்டுபோனார்கள். மருத்துவமனையில் இப்படித்தான் தூக்கிக் கொண்டு போவார்கள்—என்று தன் மனதிற்கே சமாதானம் கூறிக் கொண்டாள் அவள்.

களைத்துப் போயிருந்த அவனை ஆஸ்பத்திரியின் மூலையிலிருந்த ஒரு கட்டிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். ஆஸ்பத்திரிப் படுக்கையில் படுக்க வைக்க வேண்டியவனை அங்கு ஏன் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்ற சந்தேகம் அந்தப் பேதைப் பெண்ணின் உள்ளத்தில் தோன்றியது. பக்கத்திலிருந்தவரைக் கேட்டாள், அது என்ன கட்டிடம்—என்று!

'செத்துப் போனவர்களை அறுத்துப் பார்க்கும் கட்டிடம்!"

இப் பதிலைக் கேட்ட அவள் இதயத்தில் குபீரெனத் தீ பரவிற்று. கால்கள் நடுங்கின. பெருமூச்சுவேகமாக வந்தது. ஓடினாள், அந்தக் கட்டிடத்தை நோக்கி! காலரா என்று வந்த கணவனை—உயிரோடிருப்பவனைப் பிணமென நினைத்து அறுத்துப் பார்க்கும் 'பிணமறுக்கும் கட்டிட'த்தை நோக்கி ஓடினாள்! கணவன் உயிரோடிருக்கும் போதே அவள் தாலியை அறுக்க நினைக்கும் செயலைத் தடுக்க ஓடினாள்! காவற்காரனால் தடுத்து நிறுத்தப்பட்ட அவள் நிலைமை

சமயம் பிணம் கண் விழித்தது! களைப்பு நீங்கிய அவன், தன்னை அறுக்க வந்தவர்களைக் கண்டான்.

டாக்டர்கள் பேராச்சரியத்தில் மூழ்கினர். பிணம் கண்விழித்து, விட்டதே—என்று மருண்டோர், தவறு நிகழ்ந்துவிட்டது—என்று சமாதானம் கூறுவோர் எனப் பிளவுபட்டது அந்த டாக்டர்களின் கூட்டம்!

கடைசியில் பிணமாக மதிக்கப்பட்ட உயிர் வெளியே அனுப்பப்பட்டது. சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற மனைவி—தன் கணவன் அங்கம் பிளக்கப்பட்டு வருவான் — என நினைத்து அலறி அழ ஆரம்பித்தாள். ஆனால், கணவன் உயிரோடு இருப்பது கண்டு பெருமகிழ்ச்சியுற்றாள்!

—இது முழுக்க முழுக்கக் கற்பனையல்ல! அண்மையில் — ஆந்திராவில் மகபூப் நகரில் நடந்த சோகச் சிறுகதை. உயிர், விலையில்லாப் பண்டமாக மதிக்கப்பட்ட சோகக் காட்சி! இந்த அரசின் நிர்வாகத்திலே பொத்தல் விழுந்து கிடக்கும் இடங்களில் ஒன்றைக் காட்டும் எடுத்துக் காட்டு!

இவர்களின் நிர்வாகக்குறைக்கு இன்னும் பெரிய உதாரணங்கள் காட்ட வேண்டுமென்றாலும் அதற்கும் இடம் தந்திருக்கின்றனர் நம் அரசினர்.

இந்திய அரசின் பாதுகாப்பு இலாகா—என்றவொரு இலாகா உண்டு. அதிலிருந்த ஊழல்,

இந்த மூன்று லட்சத்து எண்பதாயிரம் ரூபாய்களை விசி எறிந்து வாங்கிய அந்த இயந்திரங்கள் இதுவரை வேலை செய்யவே இல்லையாம்!

வேலை செய்யாத இயந்திரங்களுக்காக, பணம் மூன்று லட்சம் விரயமாக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல் கப்பல் சாமான்கள் வாங்குவதற்கு செலவிட்ட தொகையில் 16,58,000 ரூபாய் பயன்படுத்தப்படாத இயந்திரங்களுக்குக் கொட்டியழப்பட்டதாம்!

ஊழலுக்கு மட்டுமல்ல, ஊதாரிச் செலவுக்கும் பாதுகாப்பிலாகா எடுத்துக் கொண்டது, 4 லட்சம் ரூபாய்! இந்த 4 லட்ச ரூபாயை மறைக்க அந்த இலாகாவினர் கள்ளக் கணக்குகள் தயாரித்தனர்; பொய்க் கணக்குகள் எழுதினர்!

—இது போன்ற ஊழல்கள் எண்ணற்றுக் கிடக்கின்றன, இந்த ஆட்சியிலே! பாதுகாப்பு இலாகாவில் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் இது பரவியிருக்கிறது. ஊழல் எளிதாகி விட்டது; சாதாரணச் செயலாகி விட்டது; அன்றாடச் செய்தியாகி விட்டது!

கேட்கின்றவர்கள் மட்டுமல்ல; எதிர்க்கட்சிகள்கூட இவர்கள் ஊழலை எடுத்துச் சொல்லிச் சொல்லிக் களைத்துப் போனார்கள். காரணம், அள்ள அள்ளக் குறையாதபடி ஊழலும், ஊதாரித்தனச் செயல்களும், அலட்சியமும், ஆணவமும் மண்டிக் கிடக்கின்றன!

வேலை செய்யாத இயந்திரங்களுக்கு லட்சம் லட்சமாய் அள்ளித் தருகிறார்கள். விலைமதிப்பு மிகுந்த பொருளாக, வேலை செய்யாத பொருட்கள் காட்சியளிக்கின்றன!

ஆனால், இந்த நாட்டில் விலை மதிப்பில்லாத பொருள் — அரசினரின் கண்ணுக்கு எளிதாய்த் தெரியும் பொருள் இந்த நாட்டு மக்களின் உயிர்தான்! காலரா நோய்க்காரனைப் பிணமென அறுக்க முற்பட்ட கதையும் பாதுகாப்பிலாக்காவின் ஊழல் நாற்றமும் நமக்கு இதைத்தான் போதிக்கின்றன!

அந்த மாதிரி சோகக் கதைகள் நிறுத்தப்பட வேண்டும்! இந்த ஊழல் நாற்றம் இல்லாதிருக்கச் செயல்பட வேண்டும். செய்வார்களா, நம்மை ஆள வந்தார்கள்?

கொலை செய்த கரத்திற்குப் பாராட்டு; புகழ்மாலை!

சென்னை சட்டமன்றத்தில், மத்திய அரசினர் கேரளத்தில் தலையிட்டதுபற்றி வந்த ஒத்திவைப்புத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதால் திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட எதிர்கட்சியினர் எல்லோரும் வெளியேறினர்.

ஆனால் ஒரே ஒரு எதிர்க்கட்சி உட்கார்ந்து கொண்டிருந்தது. உட்கார்ந்ததோடு மட்டுமல்ல; 'மத்திய அரசினர் கேரளாவில் தலையிட்டதால் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது'—என்ற அரும்பெரும் உண்மையை அந்தக் கட்சியின் தலைவர் கூறினர். உடனே 'கரகோஷம்' செய்தார்களாம்! இந்த 'சபையினர்' யார்? எதிர்க்கட்சி அல்லாத காங்கிரசார்தான்! காங்கிரசிடமிருந்து கைதட்டல் பெற்ற அந்த 'ஜனநாயக எதிர்க்கட்சி' எது தெரியுமா?—பிரஜா சோஷலிஸ்ட் கட்சி!

என்ன செய்வார்கள் பாவம், அவர்கள் அகில இந்தியக் கட்சி! அதோடு கேரள ஜனநாயகத்தின் கழுத்தை திருகியதில் அவர்களுக்கும் பங்கிருக்கிறதே!

வெள்ளி 4—9—59 சென்னை

'பதவி விலகல்'

அடிக்கல் வலுவில்லாத கட்டிடம், சிறு புயல் அடித்தாலும் ஆடிப்போவது இயற்கை!

கடையாணி இல்லாத சக்கரம் கலகலத்துச் சின்னபின்னமாவது நிச்சயம்!

இந்தச் சாதாரண தத்துவத்தைத்தான் ஒவ்வோரு நாட்டு அரசாங்கமும் பிரதிபலித்துக் காட்டுகிறது. மக்களின் செல்வாக்கிழந்து, ஆனால் ஆதிக்கத்திறம்படைத்து—உண்மைக்குப்போராட மறுத்து; ஆனால் ஊழலுக்கு உறைவிடமாகி—அதற்குப் பின்னும் 'இதுதான் ராஜாங்கம்' என்று ஆர்ப்பரித்த எத்தனையோ ஆட்சி பீடங்கள் சாக்காட்டுப் பயணம் நடத்திய சரித்திர நிகழ்ச்சிகள் ஏராளமாகும்!

இந்தத் தலைமுறையில் அப்படிப்பட்ட சம்பவங்கள் பலவற்றை உலகம் சாதித்திருக்கிறது!

அவைகளில் ஒன்றாகத்தான் இந்தியத்துணைக் கண்டத்தின் பாரத அரசாங்கம் இன்று ஆசிக்கோண்டிருக்கிறது.

டேல்லி அமைச்சரவை அடிக்கலற்ற கட்டிடமாக—கடையாணி இல்லாத சக்கரமாகத்தான் தள்ளாடிக் கோண்டிருக்கிறது, கடந்த 12 ஆண்டு காலமாக.

'சுதந்திரத்திற்குப் 'போராடியவர்கள் நாங்களே' என்ற பட்டத்தைப் போறித்துக்கோண்டே—அந்த ஒரே ஒரு மேன்மையை மட்டும் தகுதியாகக் கோண்டு அரியணையில் நிரந்தர இடத்தை அபகரித்துக்கோள்வது அவர்களது ஆட்சியில் ஒரு சோகத் தோடர்கதையாகும். நிர்வாகத் திறமையற்றவர்கள் பெரும் பதவிக்குத் தூக்கிவிடப் பட்டார்கள்; 'தியாகி' என்ற முத்திரைமட்டும் பெற்றவர்கள் 'அமைச்சர்' என்ற திருநாமத்தைச் சூட்டிக் கோண்டார்கள். ஒரு நாள் கதர்க்குல்லாய் தரித்தவர்களும், மூவண்ணக்கோடி சுமந்தவர்களும் 'ஆளப்பிறந்தவர்கள்' என்ற புதிய ஆசையின் வயப்பட்டவர்கள்—உயர்ந்த கோள்கைகளுக்காக உயிர் கோடுத்தோம் என்று பூரித்தவர்கள் பதவித்தேனிலே மோய்க்கின்ற ஈக்களாக மாறிவிட்டார்கள்!

பிறகு என்ன ஆயிற்று? அவர்கள் அரியணையில் இடம் தேடிய கணம் முதல் பாரதத்தாயின் அங்கங்களைச் சித்திரவதை செய்யும் சீரியபணியிலே தங்களை அர்ப்பணித்துக்கோண்டார்கள். தன்முதல்வர்களாலேயே புறக்கணிக்கப்பட்டதுமட்டுமேல்ல; புழுவேன மதிக்கப்படுகின்ற கோடிய நிலை கண்டு அந்தத்தாய் கண்ணீர் வடித்தாளோ என்னவோ; இந்த நாட்டின் 'நாளைய மன்னர்கள்' மட்டும் அன்று முதல் இன்று வரை சிரித்துக் கோண்டே இருக்கிறார்கள்.

அந்தச் சிரிப்பிலேதான் இந் நாட்டின் வஞ்சிக்கப்பட்டோரின் பேரும்படை—வாழ்விழந்து தவிட்போரின் பட்டாளம் — எழுப்பிய அழுகுரல் மறைந்து அழிந்து வருகிறது. ஆனால் அந்தச் சிரிப்புக்குப் பின்னால் மறைந்து கிடந்த சீர்குலைவுக் கதைகள் எல்லாம் மக்கள் மன்றத்தின் கண்களிலேயிருந்து மறைந்துவிடவில்லை; ஒவ்வோன்றாக வேளிப்பட்டுக் கோண்டுதோன் இருக்கின்றன.

அரியணை ஏறிய காலம் முதல் அவர்கள் மக்களின் வரிப் பணத்தை ஊழல் என்ற திமிங்கலத்திற்குக் கோடி கோடியாக வாரி இறைத்தார்கள். கண்ணுக்குத் தேரியாமல்—போனது மட்டுமின்றி; கணக்கேட்டிலே ஊதாரிச் செலவு என்ற தலைப்பில் விரயமானது இன்னும் பலகோடி!

எந்த ஒரு ஆட்சியிலும் காணமுடியாத இந்தக் காட்டுமிராண்டி தர்பார் நடைபெறக் காரணம் அங்கம் வகித்தவர்கள், தாங்கள் யார் என்பதை மறந்து விட்டதால் ஏற்பட்ட விபரீதமான விளைவுகளாகும்! 'மக்கள் தோண்டன்' என்பதை மறந்தார்கள்; 'அனுபவிக்கப் பிறந்தவர்கள்' என்ற கருத்துடன் ஆடம்பரத்தின் கையிலே சிக்கி விட்டார்கள்!

அத்தகைய திறனற்றவர்கள் எப்படியோ அரியணையில் இடம் தேடமுடிந்தது; அப்படித் தேடிய இடத்தையும் எப்படியோ காப்பாற்றிக் கோள்ளவும் முடிந்தது! ஆனால், இந்த நிலையும் நீடிக்கவில்லை. ஊழலின் சோந்தக்காரர்கள் ஒவ்வோருவராக வேளியேறிக் கோண்டிருந்தார்கள்.

டேல்லி மூலபீடத்தில் நிதி அமைச்சர் நாற்காலியில் இதுவரை பலர் உட்கார்ந்து விலகி இருக்கிறார்கள். அதிலே ஒருவர்கூட நேரான காரணங்களுக்காக விலகியதில்லை; அமைச்சரவையில் ஏற்பட்ட உட்குழப்பங்கள்—தனிப்பட்ட விருப்பு வேறுப்புக்கள், எப்படியும் வேளியேறித்தான் தீரவேண்டும் என்ற சூழ்நிலையை அவர்களுக்கு ஏற்படுத்திவிட்டது!

இப்போது அதே விதத்தில் சென்ற 15 நாட்களாக டேல்லி வட்டாரத்தில் பரபரப்பூட்டும் பல 'ராஜினாமாக்கள்' பற்றிய செய்திகள் அடிபடுகின்றன.

அண்மையில் உணவு அமைச்சர் ராஜிநாமா செய்தார். நாற்பது கோடி வயிற்றுக்கும் உணவு கிடைக்கச் 'செய்ய' வேண்டிய போறுப்பை ஏற்ற அவர் இலாகா, பற்றாக்குறையை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தது; பஞ்சத்தைக் கேஞ்சி அழைத்தது நாட்டுக்குள்ளே!

வங்காளத்தில் அதற்காகப் போராட்டமே நடைபெற்றது. அரிசி கிடைக்கவில்லை என்றதும், மிருகங்கள்கூட தீண்டாத மோசமான அரிசியை இந்த நாட்டு அரசர்களுக்கு வழங்கிற்று, வளத்தைப் பெருக்கி, மக்களின் வயிற்றுப் பசியை தீர்க்கத் தேரியாத உணவு இலாகா! பழுத்த அரிசியைத் தின்றதாலே புழுவேன வலியால் துடித்தோர். புழுதிச் சேற்றில் கிடக்கும் மணலெனக் காட்சியளித்த சோற்றை உண்டிட சிரமப்பட்டோர்—தாங்கள் படும் அவதியை எடுத்துக் காட்ட வங்கத்தில்—ஆந்திரத்தில் — துணைக்கண்டமேங்கணும் போராட்டம் நடத்தினர்.

நாட்டில் உருவாகும் எதிர்ப்புப் புயல் கண்டு மத்திய உணவு அமைச்சர் அஜித் பிரசாத் ஜேயின் உள்ளூர நடுங்கினார். பதவியை ராஜினாமா செய்தார்.

நாட்டிலே கோடிய பஞ்சத்தைப் பரத நாட்டியம் செய்ய அனுமதித்துவிட்டு—அது ஆடுகின்ற பாதத்தினடியில் இந்த நாட்டுப் பஞ்சைகளின் இருதயங்கள் மிதியுண்டு நசுங்கும் நிலைமையை ஏற்படுத்தி விட்டுத்தான் அவர் தன் பதவியை ராஜினாமா செய்தார் நாடேங்கும் பயங்கரமான பட்டினிச் சூழ்நிலை அரும்புகின்ற வேளையில், 'இனியும் பதவி ஒருகேடா? என்ற கண்டனங்கள் திசையேட்டும் எழும்பிவிட்டன. அதற்குப் பிறகே அவர் விலகினார்.

இப்போது மற்றுமோரு அமைச்சர் தனது விலகல் கடிதத்தைப் பண்டித நேருவின் முகத்தில் வீசி எறிந்திருக்கிறார்.

இத்தனைக்கும் அவர் சாதாரணமான அமைச்சரல்ல. நேருபிரானின் வலதுகை—இந்தியாவின் அகில உலக நிருபர்—பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனன்தான் இன்று ராஜினாமா செய்துவிட்டார்.

ஓயாது ஒழியாது விமானத்திலே ஏறி உலகைச் சுற்றியதால் ஏற்பட்ட களைப்போ—அல்லது நாள் தவறாது விருந்து வைபவங்களில் கலந்து கோண்டதால் உருவான உடற் கோளாறோ அல்ல—அவரது விலகலுக்குக் காரணம்!

வழக்கம்போல் உட்குழப்பம்தான்! நாட்டிலே அமைதி காக்க வேண்டியவர்கள் திரைமறைவில் 'அடித்துக் கோள்கிற' அவமானத்தால் ஏற்படுகிற விளைவு!

அவருடைய ராணுவ இலாக்காவில் ஊழல்கள் எண்ணிக்கையற்று மலிந்து விட்டதைப் பாராளுமன்றத்திலே பல உறுப்பினர்கள் கண்டித்ததால் உலகத்தின் முக்கியப் பெருந்தலைகளில் ஒருவராகக் கருதப்படுகிற அவரது நிர்வாகம் இப்படிக் கேவலமான நிலைமையில் இருப்பதை ஆதாரத்தோடு எடுத்துச் சுட்டிக் காட்டினார்கள். இனியும் அவர் பதவியில் ஒட்டிக்கோண்டிருப்பது மிகவும் வேட்கக்கேடானது—என்றேல்லாம் கூட அவர் தாக்கப்பட்டார்.

அதோடுமட்டுமேல்ல: அவரது விலகல் செய்தி வருவதற்கு முன்னாலே இந்திய ராணுவத் தளபதி திம்மையாவும்—கடற்படை, விமானப்படைத் தளபதிகளும் பதவியைத் துறந்துவிடப்போவதாக செய்திகள் பரவின. அவர்களது விலகலுக்குக் காரணம் பதவி உயர்வு தகராறில் கிருஷ்ணமேனன் காட்டிய பாரபட்சமும், நேர்மைக்குப் புறம்பான நடவடிக்கைகளும்தான் காரணமாம்!

இத்தகைய விருப்பு வேறுப்புகளும், ஊழலை வளர்க்கும் பண்புதான் மத்திய அமைச்சரவையிலிருந்து அமைச்சர்கள் வேளியேறுவதற்குக் காரணங்கள் என்பதை நாடு நன்கு உணர்ந்து கோண்டுவிட்டது! இப்படி குறைகளுக்கும் கோப தாபங்களுக்கும் உறைவிடமாக இருக்கும் இவர்களிடம் இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் தேன்னகம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டுமோ?

ராஜிநாமா எனும் தொடர்கதை எழுதியவர்கள்; ஒன்பது பேர்!

பண்டித நேரு கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாய் இந்தியத் துணைக்கண்டத்தின் முதலமைச்சராய் தொடர்ந்து இருந்து வந்தாலும் மூன்று தடவைகள் தன்னுடைய பெரும்பதவியை ராஜிநாமா செய்துவிட அவர் முயன்றிருக்கிறார். ஏனோ அம்முயற்சிகள் வெற்றி நிலையை எட்டவில்லை! ஆனால், அவருடைய அமைச்சரவையில் பணியாற்றிய அமைச்சர்கள் பலர் பதவியிலிருந்து விலக நேரிட்டுள்ளது.

சென்ற திங்களில் பதவி துறந்த உணவுத்துறை அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் உள்பட கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் ஒன்பது அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள் தங்களது பதவிகளை பல்வேறு காரணங்களுக்காக ராஜிநாமா செய்துள்ளனர்.

நான்கு அமைச்சர்கள் முழுமையாகவோ அல்லது ஓரளவுக்கோ பொருளாதார பிரச்சினைகளுக்காக பதவியிலிருந்து விலகினர். இந்திய—பாக்கிஸ்தான் உறவுக்கொள்கை காரணமாக இரண்டு அமைச்சர்கள் ராஜிநாமா செய்தனர். ஒரு அமைச்சர் மொழி வழி இராஜ்யங்கள் அமைவதில் ஏற்பட்ட சிக்கலின் விளைவாக பதவி துறக்க நேரிட்டது. முந்திரா ஊழல் விவகாரத்தில் ஒருவர் பதவி விலக நேரிட்டது. கடைசியாக, ஜெயின் அவர்கள் உணவுக் கொள்கையின் காரணமாக ஒன்பதாவது நபராக பதவியிலிருந்து விலகியுள்ளார்.

ரபி அகமத் கித்வாய் அவர்கள் கிருபாளனி துவக்கிய கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியில் சேருவதற்காக அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்து, பின்னர் பதவியிலமர்ந்த நிகழ்ச்சியும், இராசகோபாலாச்சாரியார் உள்நாட்டு அமைச்சர் பதவியை சரியான காரணங்களைச் சொல்லாமல் உள்வேதனையால் துறந்ததையும் கணக்கில் சேர்க்கவில்லை.

இப்படி நேருவின் அமைச்சரவையிலிருந்து பலர் விலகியுள்ளனர். ஒரு கணவனிடத்தில் தனித்திருந்து, வேறு நான்கு கணவன்மார்களையும் திருப்திபடுத்தும் துர்பாக்கிய நிலைமையில் திண்டாடும் நவீன திரௌபதைகளாக மத்திய மந்திரிகள் இருக்கவேண்டியுள்ளது என்று முன்னாளமைச்சர் சந்தானம் அவர்கள் வருணிப்பது விஷயத்தை விளக்குவதாக இருக்கிறது.

ஒன்பது அமைச்சர்களும் — அமைச்சரவை அந்தஸ்துள்ளவர்கள் இராஜிநாமா செய்ய காரணங்களாக அமைந்தவைகளை ஆராய்ந்து பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கவனிக்கவேண்டும் — பதவியிலிருந்து விலகியவர்கள் சுட்டிக் காட்டிய தவறான நிலைமைகள் இன்னும் திருந்தாமல் இருப்பது சிந்தனையைத் தூண்டுவதாகும்,

ஒவ்வொரு அமைச்சரும் பதவியைத் துறக்க நேரிட்ட நிலைமைகளையும், அவர்கள் கூறிய காரணங்களையும் விளக்கமாகவும், தெளிவாகவும் அறிந்து கொண்டால் நேருவினுடைய அமைச்சரவையின் அலங்கோலத்தையும், ஜனநாயகப் பழக்கத்தின் பெயரால் நிகழும் கேலிக்கூத்தையும் தெரிந்துகொள்ள முடியும். அத்துடன் சில அமைச்சர்களின் அதிகார துஷ்பிரயோகத்தைபும் அறிந்துகொள்ள இயலும்.

முதன்முதலாகப் பதவியிலிருந்து விலகிய அமைச்சர் சர். ஆர். கே. சண்முகம்செட்டியார் ஆவார்கள்.

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து சென்றவுடன், வரி செலுத்தாமல் ஏமாற்றுவோர் பற்றி விசாரிக்க ஒரு குழு இந்திய சர்க்காரால் அமைக்கப்பட்டது. குழுவும் தன்னுடைய விசாரணையைத் துவக்கியது. இந்நிலையில். சில தொழிலதிபர்கள் பொருளாதார அமைச்சரான சண்முகம் செட்டியாரை அணுகி, அவருடைய அதிகார உத்திரவின் பேரில் பல்வேறு காரணங்களுக்காக சில பல ஆண்டுகளுக்கு வரி விதிப்பதிலிருந்து தப்பித்துக்கொண்டனர். பொருளாதார அமைச்சர் என்ற முறையில் வரி விலக்களிக்கஅவருக்கு உரிமை இருந்தாலும், சண்முகம் செட்டியாரின் செயல்பற்றிக் கண்டனக் கணைகள் பல்வேறு முனைகளிலிருந்து கிளம்பின. வேண்டியவர்களுக்குத் தாராளமாக சலுகைகள் நல்கிறது, நண்பர்களுக்கு உதவியளிக்க அமைச்சர் பதவியைத் தவறாகப் பயன்படுத்தியது — இப்படி குற்றச்சாட்டுகள் எழுந்தன,

காங்கிரஸ் கட்சியைச் சாராத, அமைச்சர் பதவி அளித்தும் காங்கிரசில் சேர விரும்பாத சண்முகம் செட்டியாரைப் பழி தீர்த்துக் கொள்ள இவ்வாய்ப்பை நன்முறையில் காங்கிரஸ் கட்சியின் வெறியர்கள் பயன்படுத்திக்கொள்ள தலைப்பட்டனர். இவைகளின் விளைவாக சண்முகம் செட்டியார் 1948-ல் பொருளாதார அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார். தான் செய்த காரியங்களுக்கு விளக்கம் தந்து, தந்நிலைமையை விவரித்து அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய அருமையான சொற்பொழிவைக் கேட்டவர்கள், அவர் பதவியைத் துறந்தது அவசியமற்றது என்றே கருதினர்—என்றாலும். சண்முகம் செட்டியார் மீண்டும் டெல்லி செல்ல நேரிடவில்லை!

1950-ம் ஆண்டு மீண்டும் காங்கிரஸ் கட்சியில் சேராத மூன்று மத்திய அமைச்சர்களின் பதவி விலகலைக் கண்டது.

தொழில் துறை அமைச்சராக இருந்த டாக்டர் முகர்ஜியும், வியாபாரத் துறை அமைச்சராக விளங்கிய கே. சி. நியோகியும் டெல்லி ஒப்பந்தம் என்று வருணிக்கப்பட்ட நேரு — லியாகத் அலி ஒப்பந்தத்தை ஏற்காமல் அமைச்சரவையிலிருந்து வெளியேறினர். கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்தும், மேற்கு வங்காளத்திலிருந்தும் வெறிபிடித்த மதக் கலவரத்திலிருந்து தோன்றிய அகதிகள் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்காக பாரத-பாக்கிஸ்தான் பிரதமர்கள் இருவரும் சந்தித்துப் பேசி எடுக்கப்பட்ட முடிவுகளைக் கொண்டதே டெல்லி ஒப்பந்தமாகும். பட்டேலும், ஏனைய அமைச்சர்களும் கூட அவ்வொப்பந்தத்தை அமைச்சரவைக் கூட்டத்திலே வெகு தீவிரமாகக் கண்டித்தனர்.

அவர்களெல்லாம் வாளாயிருக்க, முகர்ஜியும், நியோகியும் அமைச்சர் பதவிகளைத் துறந்து தங்களது கொள்கைகளே பதவியைவிட மேலானவை என நிரூபித்தனர்.

சண்முகம் செட்டியாருக்குப் பிறகு பொருளாதாரஅமைச்சராக வந்த டாக்டர் ஜான் மத்தாய் அடுத்தபடியாக சில மாதங்களுக்குப்பிறகு தன்னுடைய அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்தார்.

சி. ஜம்பு

திட்டக் குழுவின் அந்தஸ்து. அதிகாரம், வேலை இவைகள் குறித்து இந்தியப் பிரதமர் நேருவுக்கும், பொருளாதார அமைச்சர் ஜான் மத்தாயுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. திட்டக்குழு ஒரு "பெரிய அமைச்சரவையாக" மாறுவதுடன், எவருக்கும் பதிலளிக்காத... ஆனால் எதையும் தனக்குத்தானே செய்துகொள்ளும் ஆதரவு பெற்ற மன்றமாகிவிடும் என ஜான் மத்தாய கருதினார். மேலும், நேரு மிகப் பெரிய தேசியத் திட்டத்தை உருவாக்க விரும்பினார். இந்தியாவின் பொருளாதார நிலைமை படுமோசமாயிருக்கும் 1950-ல் ஒரு மிகப் பெரிய ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே தேவைதானா என மத்தாய் ஐயுற்றார். வெள்ளையன் காலத்திலேயே அரசாங்கப் பெரும்பணியாளர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கையில், பற்றுக்குறை நிதிக்கொள்கையைக் கடைப்பிடிப்பதின் மூலம் ஏன் ஒரு திட்டம் வெகு சிரமப்பட்டு அமையவேண்டும் என்றும் மத்தாய் எண்ணினார். இந்நிலையில் பொருளாதாரக் குழுவின் முடிவை ஏற்றுக்கொள்ளாத நிலைமையும் ஜான் மத்தாயுக்கு எதிராக உருவாகியது. இங்கிலாந்தில் உள்ள ஹை கமிஷனரே எத்தகைய அதிகப்படியான செலவும் இல்லாமல் அயர்லாந்தில் இந்தியத் தூதுவராக பணியாற்றுவது என அமைச்சரவையில் முடிவாது. அப்பொழுது இந்தியாவின் ஹை கமிஷனராக இங்கிலாந்தில் இருந்தவர் கிருஷ்ண மேனன் ஆவார்கள்.

அவரோ, அயர்லாந்தில் பணிமனைக்கு ஒரு கட்டிடம் மிகத் தேவை, அத்துடன் நிர்வாகத்திற்கு ஆட்களும் அவசியம் எனக் கூறி, நேருவின் இசைவையும் பெற்றுவிட்டார். ஆனால், பொருளாதாரக்] குழுவோ செலவு வீணானது; அவசியமற்றது எனச் சொல்லி எதிர்த்தது. என்றாலும், அமைச்சரவை கிருஷ்ண மேனனின் விரயச் செலவிற்கு ஒத்துக் கொண்டது. இந்தப் போக்கு தனக்கேற்பட்ட அவமதிப்பு என ஜான் மத்தாய் கருதினார். இந்நிலையில் ஒரு காங்கிரஸ்காரரே பொருளியல் அமைச்சராக இருக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் பெரிதும் விரும்பினர். ஆக. பொருளாதாரக் கொள்கைக்காக, தன் மானத்திற்காக, காங்கிரஸ்காரர்களின் கட்சி நோக்கினால் ஏற்பட்ட நிலைமைக்காக டாக்டர் ஜான் மத்தாய் அமைச்சர் பதவியைத் துறந்தார்.

1951—ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியில் சேராமல் தன்னந்தனியாக சட்ட மந்திரியாக பணியாற்றி வந்த டாக்டர் அம்பேத்கார் பதவியிலிருந்து விலகினார். பதவி விலகல் குறித்து பாராளுமன்றத்தில் அவர், ஜவகர்லால் நேருவின் கொள்கைகளை, நிர்வாகத்தை மிகவும் வன்மையாகக் கண்டித்து விளக்கமாக சொற்பொழிவு நிகழ்த்தினார். அமைச்சரவையிலே போதுமான பொறுப்புகள் தனக்களிக்கப்படவில்லை என்றும், ஆதித் திராவிடர்கள் முன்னேற ஒழுங்கான முறையில் யாதும் செய்யப்படவில்லை என்றும், அயல்நாட்டுக் கொள்கை நிறைய விரோதி நாடுகளையே சம்பாதித்திருக்கிறது என்றும். அமைச்சரவை தனியாக முன்கூட்டியே எடுக்கப்பட்ட முடிவுகளை எடுத்துக்கொள்ளும் நேருவின் கைப்பொம்மையென்றும், இந்து சட்ட மசோதா விரைவாக நிறைவேற்றப்படாமல் இருப்பது இந்துமதப் பழமைக்கு பணிவதாகுமென்றும் குறிப்பிட்டு கடுமையாகப் பேசினார்—பலன் கிட்டவில்லை—பதவி துறந்ததுதான் மிச்சம்!

1954-ல் தொழிலாளர் மந்திரி வி. வி. கிரி அவர்கள் ராஜிநாமா செய்தார். பாங்கு ஊழியர்களுக்கு

[தொடர்ச்சி பக்கம்—12]

படித்து விட்டீர்களா?

* தி. மு. க-வின் இலட்சிய முழக்கம்!
* தென்னகத்து விடுதலைகீதம்!!

'ஐ. நா. வில் அண்ணா'

ஆசிரியர்: தென்னவன்

விலை 50 காசு.

(இக்கின்பாதம், சுதேசமித்திரன் புத்தகக் கடைகளில் கிடைக்கும்.)

செல்வன் வெளியீடு,

74, ஐயா முதலி தெரு, சென்னை—2.

நவம்பர் முதல் நாள் வெளிவருகிறது!

'கனவு'

[அறிவியல் — கலையியல் — மாத இதழ்.]

ஆசிரியர்: ம. கோ. மணி

தனி இதழ் 25 காசு. ஆண்டுக்குக் கட்டணம் ரூ. 3.

விபரங்களுக்கு:

கனவு, அணைக்கரை—தஞ்சை மாவட்டம்.

ஒரு பக்கக் கதை

உலகத்திற்கும் அவனுக்கும் இடையே இருக்கின்ற பந்தத்தையே வெட்டிப் பிரிப்பதைப் போல் விண்ணிலேறிக் கொண்டிருந்தது விமானம். கையிலே துவண்டு கிடந்த மலர் மாலையைப் பக்கத்தில் வைத்துவிட்டு ஜன்னல் வழியே கீழேநோக்கினான், அவன்!

ஜன்னல் கண்ணாடியின்மேல் தூசோ — அல்லது அவனது கண்களிலே படர்ந்திருந்த கண்ணீரோ தெரியவில்லை— அவனுக்கு எதிரே பனி மூட்டத்தைப்போன்ற காட்சியைத்தான் காட்டியது! ஆனால்.... அதற்கிடையேயும் அந்த முகத்தை—கண்ணீர் விட்டுக்கொண்டு விடைகொடுத்து அனுப்பிய அவளுடைய சுந்தர முகத்தை அவனால் காணமுடிந்தது!

"ஐந்து வருடங்களா அத்தான்...? நான் எப்படியத்தான் சகித்திருப்பேன்?" — விமான நிலையத்திலே அவள் விம்மியழுத வேதனைக் குரல், அவன் செவிகளில் மீண்டுமொருமுறை காய்ச்சிய ஈயமாகப் பாய்ந்தது.

"பைத்தியமே! ஐந்து வருடங்கள்...நான் என்ன சிறைக்கா போகிறேன்? உயர் படிப்பும் பட்டமும் பெற்று வரத்தானே? அதற்குப் பிறகு அமெரிக்கா சென்று திரும்பிய பிரபல டாக்டர் என்று என்னைப் புகழ்வார்களே; அதிலே உனக்கில்லையா பெருமை?"

"பத்து வருடங்கள்கூட நான் பொறுத்திருப்பேன்; ஆனால்....... ஆனால்...நீங்கள் திரும்பி வரும்போது என்னுடைய சாரதியாகவே வருவீர்களா அத்தான்? அல்லது 'இதுதான் காதல்' என்று மற்றவர் பரிகசிக்கச் செய்துவிடுவீர்களா?"

விமானம் புறப்படும் எச்சரிக்கை ஒலி மட்டும் அப்போது எழுந்திராவிட்டால் அவனும் அழுதேயிருப்பான்!

ஆனால், விமானத்தின் படிகளிலே அவன் காலடி வைத்தபோது மற்றவர் காதுகளில் பட்டுவிடுமே என்ற வெட்கங்கூட இல்லாமல் அவன் தந்த உறுதிமொழி.... இதோ மீண்டும் அவன் உதடுகள் முணுமுணுக்கின்றன:

"ரத்னா! நான் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பிவரும்போது, புதிய பட்டத்தை மட்டும் சுமந்து வரமாட்டேன்; நம்முடைய திருமண அழைப்பிதழையும் அங்கேயே அச்சடித்துத் தூக்கி வருகிறேன்!"

இந்த விமானம் இப்படியே விழுந்து நொறுங்கித் தீப்பற்றிச் சின்னாபின்னமாகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?... சாரதி சிந்தித்தான். ஐந்து வருட காலம் ரத்னாவின் நினைவு தரும் கொடுந் தண்டனையிலிருந்து தப்பிவிடலாமல்லவா?

* * *

பிரிந்து கிடக்கும் இரு உள்ளங்களை ஒன்றுக்கும் பாலமாகிய கடிதம், ஆழ்கடல் தாண்டிப் பறந்தன, இருவருக்குமிடையே!

காலம் ஓடியது!

நாகரிகத்தின் தொட்டிலில் உருண்டு கிடந்த சாரதி, பல நகரங்களைச் சுற்றிப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் தானே ஏற்பட்டது. இங்கே, பிரிவின் கொடுமையைத் தாங்கமுடியாது தவித்து, கடைசியில் அரசாங்க அலுவல் ஒன்றில் சேர்ந்த ரத்னா மாதத்திற்கு ஒரு ஊராக மாற்றப்பட்டாள்!

இடையிலே பறந்து கொண்டிருந்த கடிதங்களில் சில, காலதாமதத்திற்குப் பிறகு கிடைத்தன. சில புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் சென்றன!

அதனாலென்ன; கடிதத்தால் வளர்வது மட்டும்தான் காதலா? அல்லது காலத்தால் அழிந்து விடக்கூடியதா அத்தகைய உறவு?

* * *

ஐந்தாண்டுகள் விடைபெற்றுச் சென்றுவிட்டன!

அவன்—சந்தேகமில்லை; சாரதியேதான்—ஏழாவது மாடியில் இருந்த ஒரு குடும்பப் பகுதியில் நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஏதோன்றில் லயித்திருந்தான்.

கண்கள் மேசைமேல் இருந்த காலண்டரில் பாய்ந்தன. எதையோ எண்ணிய அவன் உள்ளம் துணுக்குற்றது! இல்லாவிடில் அவன் கண்கள் மறுகணமே பக்கத்தில் கிடந்த தொட்டிலில் பாய்வானேன்?

அங்கே........?

பஞ்சன்னப் பிஞ்சுக் கால்கள் உதைத்து—சிறு விழியால் குறுநகை புரிந்திடும் குழவி ஒன்று சிரித்துக்கொண்டிருந்தது அவனைப் பார்த்து!

அந்தச் சிரிப்பின் பொருள்?

சஞ்சலத்தில் உழன்று கொண்டிருந்த அவனது மனம் இந்த வினாவை எழுப்பிக்கொண்டு மேலும் தவித்தது.

"என்னைப் பெற்றவனே! நீ பிறந்த நாடு போவதற்கு நான் தடையாக இருக்கிறேன் என்கிறாயா? அப்படியானால் என்னைக் கொன்றுவிடு! கொன்றுவிடு!"

—குழந்தை இப்படித்தான் கேட்டதாக அவன் உணர்ந்தான்; நடுங்கினான்; வாய்விட்டுக் கதற வேண்டும் என்ற நிலைமைக்குத் துரத்தப்பட்டான்.

"டார்லிங்...! இன்னும் நான்கு தினங்களில் நாம் புறப்பட்டாக வேண்டும்!" — துள்ளிக் குதித்துக்கொண்டு வந்த அமெரிக்க மாதொருத்தி அவன் தோள்மேல் கரம் வைத்து முகத்தோடு முகம் பொருத்தினாள்.

"என்ன; அவ்வளவு சீக்கிரத்திலேயா?"—அவன் பதறினான்.

"ஏன்?"

"இல்லை; நான் இந்தியாவிற்கு போகவே வேண்டாம் என்று நினைக்கிறேன்!"

"நான் விடமாட்டேனே! என் கணவரின் பிறந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என்கிற எனது ஆவல் இடையிலேயுள்ள இந்த நான்கு நாட்களை எப்படியெல்லாம் சபிக்கிறது தெரியுமா? 'பாஸ்போர்ட்' எல்லாம் தயாராகிவிட்டது! புறப்படத்தான் வேண்டும்!"

—அவள் ஆணையிட்டாளோ; அன்புக் கட்டளையிட்டாளோ; எதுவாக இருந்தாலும் அவனால் தடுக்க முடியவில்லை; தலையசைத்து விட்டான்!

* * *

விமானம் கீழிறங்கும் அறிகுறி தென்பட்டதும், அவன் உடல் முழுதுமே நடுங்க ஆரம்பித்துவிட்டது! இப்படியே விமானம் விழுந்து நொறுங்கி தீப்பற்றிச் சின்னபின்னமாகிவிடக் கூடாதா என்று ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டுமொருமுறை அவன் மனம் ஆசைப்பட்டது.

விமானத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. கடைசியில் 'டாக்டர் சாரதி'யின் குடும்பம் வெளிவந்தது. மலர் மாலைகள் குவிந்தன. அவன் அத்தனையையும் பெற்றுக்கொண்டான், அலைமோதும் நெஞ்சத்தோடு! ஆனால், அவன் கண்கள் யாரையோ தேடின... அவள்.... அவள்.... அவளைக்காணவில்லை! மலர் மாலை ஏன் சுமந்து வர வேண்டும்; மணமாலையுடன் வீட்டிலே காத்திருப்பாளே!

பலமனைத்தும் இழந்துவிட்ட பல்லாண்டு வியாதிக்காரனாக அவன் தன்னை உணர்ந்தான். கால்கள் தடுமாறி கீழே விழுவதற்குள் தன்னுடைய எஜமானனைத் தயாராக நின்ற காரில் ஏற்றினான் காரோட்டி!

"ஆடம்பம் இல்லாத அழகான நகரம்! நான் மகிழ்கிறேன்; மிகவும் மகிழ்கிறேன்"— ஓடும் காரில், தன் குழந்தைச் செல்வத்தை மார்போடு அணைத்துக்கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினாள், அந்தப் புதிய மங்கை!

கார் ஓடிக்கொண்டிருந்தது.

"டிரைவர்...! டிரைவர்!"

—சாரதிதான் கத்தினான்; திடுக்கிட்ட டிரைவர் விபத்து ஏதும் நிகழ்ந்துவிட்டதோ என்று அச்சத்துடன் திரும்பினான்.

"இந்தத் தெருவில் போகாதே! இந்தத் தெருவில் போகாதே!"— சாரதி வேகத்துடன் ஆணையிட்டான்.

"என்ன எஜமான் இது; இந்தத் தெருவில் நுழையாமல் நம் வீட்டுக்குப்போக முடியாதுங்களே!"

"வேறு வழியாக ஓட்டு!"

—டிரைவர் மறுபடியும் சிரித்தான். இதை விட்டால் வேறு வழியே கிடையாதுங்க! எஜமான்; நம்ப ஊர், தெரு, வழியெல்லாம் மறந்துட்டீங்களா? புழுதியா இருக்கேன்னு பார்க்கிறீங்களா? கண்ணிலே படாம கணநேரத்திலே போயிடறேன்!"

புழுதி கண்ணிலே படவில்லையே; சாரதியின் உள்ளத்திலேயல்லவா கப்பிக் கொண்டது?

அந்தத் தெரு-ஆமாம்; அங்கேதான் அன்றொரு நாள் அவன் விட்டுப் பிரிந்த 'அவளுடைய' வீடு இருக்கிறது! அவனது விழிகள் எப்படி அந்த வீட்டை நோக்கும்? அங்கே வழி நோக்கி நிற்கும் ரத்னாவை எப்படிப் பார்க்கும்?

கார் ஓடியது!

காட்டெருமை குதித்த சேற்றைப்போல் அவன் உள்ளம் குலைந்து போய்விட்டது! அதோ ...நெருங்கி விட்டது அவளுடைய வீடு!

'சரக்...' — திடீரென்று கார் நின்றது!

சாரதி திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவள் வீட்டு வாசலில்தான் நின்று விட்டது அந்தப் பொல்லாத கார்!

"ஏய் முட்டாளே! ஏன் நிறுத்தினாய்? ஐயோ ஓட்டு சீக்கிரம்; ஓட்டித் தொலையேன்!" — வெறிபிடித்த பித்தனைப்போல் கூக்குரலிட்டான் சாரதி!

காரின் முன் சக்கரங்களுக்கிடையே அசையாமல் படுத்துக் கிடந்த சொறி பிடித்த தெரு நாயைக் கிளப்பும் கடினமான வேலையில் டிரைவர் ஈடுபட்டு விட்டான்!

"அதோ பாருங்கள் டார்லிங்; அந்த மாடியில்..."— கணவனின் தோளைத் தொட்டு அசைத்தாள் அந்த வேற்று நாட்டுப் பெண்!

"மாட்டேன்; பார்க்க மாட்டேன்!" என்று அவன் அலறினான். ஆனாலும் அவன் கண்கள் ஏனோ திரும்பின. ஐயோ...! விழிகளிலே ஆவலைத் தேக்கி — ஐந்தாண்டுகாலப் பிரிவைக்கொன்றுவிட்ட குதூகலத்தை முகத்திலே நிரப்பி—பூமியிலே கால் பாவாமல் நிற்கின்ற ரத்னாவைக் காண அந்தத் துரோகியின் இரக்கமில்லா இருதயம் எப்படித் துணிந்தது?

"அதோ...அவர்கள் எவ்வளவு குதூகலமாக இருக்கிறார்கள் பார்த்தீர்களா?"

அவன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டான்! மொட்டை மாடியிலே நிற்பது யார்? ரத்னா; ரத்னாவேதான்! அவள் கையில்....குழந்தை; குழந்தையேதான்! அவள் எதிரில் சிரித்துக் கொண்டு நிற்கும் அவன்... யார்?.......யார்...?

"எஜமான்! போனவருஷம் நம்ப பெரியதுரை ஐயா பொண்ணு ரத்னாவோட கல்யாணம் ரொம்ப ஜோரா நடந்திச்சு எஜமான்!"—காரைக் கிளம்புமுன் தன் முதலாளிக்கு 'ஊர்ச் செய்தி' ஒன்றை பூரிப்புடன் தெரிவித்தான் காரோட்டி!

அப்படியானால்....? ரத்னாவின் அருகில் நிற்பவன்.... அவள் கணவன்; அவள் கணவனேதான்!

கார் புறப்பட்டது!

சாரதி, தன் அமெரிக்க நாட்டு மனைவியின் தோளின்மேல் கை போட்டு புன்சிரிப்பு தவழும் முகத்தோடு பயணம் செய்தான், இப்போது!

—சொர்ணம்

இதுவரை:

செழியன், பாண்டிய நாட்டு வீரன். பாண்டிய மன்னனும் கரிகாற் சோழனும் உலா வரும்போது, கரிகாலரைக் கொல்ல நினைத்த ஒரு துரோகியைப் போரிட்டுக் கொல்கிறான். போரில் காயமடைந்த செழியனைக் காரிக்கண்ணனார் எனும் புலவரின் மகள் முத்துநகை காப்பாற்றுகிறாள். என்றாலும், செழியன திடீரெனக் காணாமற் போய்விடுகிறான்!

அப்போதுதான் முத்துநகை உணர்கிறாள். நாட்டை இழந்த வேளிர்குடி அரசன் இருங்கோவேள்தான் இச் சதிச்செயல்களுக்குக் காரணகர்த்தா என்று. புலவரும் யவனக் கிழவர் — என்பவரும் அந்தச் சதியில் பங்கெடுத்துக்கொண்டவர்களோ—என்று சந்தேகித்த முத்துநகை, கரிகாலரின் அனுமதியுடன், ஆண் உடை பூண்டு செழியனைத் தேடப் புறப்படுகிறாள்.

வழியில் இருங்கோவேளின் தங்கையான தாமரை, முத்துநகை ஆண்—என நம்பிக் காதல் உணர்வு கொள்கிறாள். அதே போல் வேளிர்குடி மன்னன் எனத் தெரியாது, பாண்டிய நாட்டு ஒற்றன் வீரபாண்டி —என நினைத்து, இருங்கோவேளின்பால் காதல் கொள்கிறாள், முத்துநகை! எதிரி நாட்டுக்காரி என்று தெரிந்தும் மனத்தைப் பறிகொடுக்கிறான், இருங்கோவேள்

தாமரை, முத்துநகையை ஊமை வைத்தியனாக நடிக்கச் செய்து, ரகசிய மாளிகையிலுள்ள தன் அண்ணியிடம்— நோய்வாய்ப்பட்ட இருங்கோவேளின் மனைவியிடம்–அழைத்துச் செல்கிறாள். இதை அறிந்த இருங்கோவேள் முத்துநகையின் கண்களில் தென்படாது இருக்கிறான்.

காணாமற்போன செழியன் இருங்கோவேளின் சிறையில் கிடந்து உழல்கிறான். கொடுமையான தண்டனைகளுக்குள்ளாகியும் மனந்தளராத அவன் நெஞ்சுறுதி கண்டு தாமரையின் உள்ளத்தில் இரக்கம் பிறக்கிறது. உதவி செய்யப் போன அவளை எங்கோ பார்த்ததாகச் செழியனுக்கு நினைவு வருகிறது.

ஆம்; பாண்டிய மன்னர், செழியனின் திருமணத்திற்குத் தேர்ந்தெடுத்த பெண்ணின் ஓவியத்திலிருந்தவளே அவள் — என அறிகிறான்.

ஒரு தடவை, செழியன் மயக்கமுற்றிருப்பதாக அறிந்த தாமரை சிறைக்கே ஓடிவருகிறாள். அங்கு நடந்த உரையாடலில் இருங்கோவேளின் தங்கையே தாமரை என அறிந்து அதிர்ச்சியடைகிறான் செழியன்.

அச்சமயம் உள்ளே நுழைந்த இருங்கோவேள் மேலும் ஒரு அதிர்ச்சி தரும் செய்தியைச் சொல்கிறான். தாமரையைச் செழியனுக்குத் திருமணம் செய்து வைத்து அவனைத் துணைவனாக ஆக்கிக்கொள்ள எண்ணியிருப்பதையும், இதை விளக்கி 'பாண்டியர் பகைவனாகிவிட்டேன்' —என்றெழுதிய ஒரு ஓலையை பாண்டிய மன்னனுக்குச் செழியன் எழுதித் தர வேண்டுமென்றும் சொல்கிறான்.

முதலில் பதட்டமடைந்த செழியன், இதன்மூலம் தப்பவழியுண்டு எனத் தெரிந்து அக் கடிதத்தை எழுதித் தருகிறான். அதை வாங்கிக் கொண்ட இருங்கோவேள், செழியனை மீட்க வந்து கொண்டிருக்கும் பாண்டியர் படைத் தளபதியிடம் தந்து, படையெடுப்பை நிறுத்திவிட எண்ணி ஒரு ஆள் வசம் அக் கடிதத்தைக் கொடுத்தனுப்புகிறான்....

★

16

பாண்டியர் படையெடுப்பு

பாண்டிய நாட்டுத் தலைநகரம் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டது. புன்னகை பூத்த முகத்துடன் வீரர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் அழகை வீதியோரங்களில் நின்று வயது முதிர்ந்தோர் கண்டு களித்தனர். வீதியிற் சென்றுகொண்டிருக்கும் வீரர்களின் கூட்டம் மேலும் மேலும் பெருகிடும் விதத்தில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் வீரர்கள் வந்து கூட்டத்தில் நுழைந்து கொண்டனர். அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு வைத்தவிழி வாங்காது அவர்களையே பார்த்துக் கொண்டு அவர்தம் துணைவியர் வாயிற்படிகளில் நின்று கொண்டிருந்தனர்.

எல்லா வீரர்களும் தங்கள் தங்கள் வீடுகளில் 'போருக்குப் போய்வருகிறேன்' என்று கூறிட முடிந்ததே தவிர, எந்தப் போருக்கு? எங்கே? யாரை எதிர்க்க? — என்ற விவரங்களை விளக்கிட முடியவில்லை. காரணம், அந்த விவரம் அவர்களுக்கே அறிவிக்கப்படவில்லை. தினவெடுக்கும் தோள்களுக்கு வேலை வந்தால் போதும் என்ற துடிதுடிப்பு அந்த வீரர்களுக்கு! அவர்களின் மார்பில் ஏந்திவரும் விழுப்புண்களுக்கு முத்தமீந்து ஆற்றிட வேண்டுமென்ற தணியாத ஆசை, அவர்களைத் தழுவி மகிழ்ந்த காதலியர்க்கு!

"என் மகன் பட்ட காயம் எங்கே தெரியுமா? நெஞ்சாங் குழியில்!" எனக் கூறிப் பெருமையடைய வேண்டுமென்ற ஆத்திரம் கிழவிகளுக்கு!

"எதிரிகளின் இருதயத்தில் அவர்களின் பற்களைத் தட்டிப் போட்டு நம் குழந்தைக்குக் "கிலு கிலுப்பை" கொண்டு வாருங்கள் அத்தான்" என்று விடைகொடுத்தனுப்பிய தாய்மார்களின் வீரக்குரல் பாண்டியன் தலைநகரெங்கணும் ஒலித்துக் கொண்டுதானிருந்தது.

பலநாள் பட்டினி கிடந்த புலிக் கூட்டம், திடீரெனக் கண்ணில் பட்ட மான் கூட்டத்தை நோக்கிப் புறப்பட்டதுபோல் பாண்டிய நாட்டு வீரர்கள் போருக்குப் புறப்பட்டார்கள். அரண்மனை முகப்பில் மீனக் கொடி வெகுகம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. அந்தக் கொடி நிழலில் ஒலித்துக் கொண்டிருந்த முரசம், போர் வீரர்களை உணர்ச்சி வடிவங்களாக ஆக்கிக் கொண்டிருந்தது. கொடிமரத்தடியில் பாண்டிய நாட்டுத் தளபதி நெடுமாறன் புரவியில் அமர்ந்து வீரர்கள் அணிவகுப்பதைக் கண்காணித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அரசர் வருவதை அறிவிக்கும் இசைக் கருவி முழங்கிற்று. அதனைத் தொடர்ந்து ஆனைமீது பெருவழுதிப் பாண்டியர் அணிவகுப்புக்கிடையே வந்து சேர்ந்தார். தளபதியும், போர் மறவர்களும் தலை தாழ்த்தி அரசருக்கு வணக்கம் தெரிவித்தார்கள். பெருவழுதிப் பாண்டியர் வீரர்களை நோக்கினார்.

"அருமைமிகு பாண்டியத்து ஆற்றல் நிறை மறவர்களே! அனைவரையும் வாழ்த்துகிறேன். போர் என்று அழைத்தேன். எங்கே? யாருடன்? என்று கேட்காமலேகூட ஓடிவந்து கூடிவிட்டீர்கள். புறப்படும் வரையில் செய்தி பரவிட வேண்டாமென்றுதான் ஒளித்து வைத்தேன். நமது செழியன் எதிரிகள் வசம் சிக்கியிருக்கிறான் என்றே நீங்கள் அறிவீர்கள். ஆனால் அந்த எதிரி யாரென்று அறியமாட்டீர்கள். வேளிர்குல மன்னன் இருங்கோவேள்தான் செழியனைச் சிறைப்படுத்தியிருக்கிறான். நாடிழந்த அந்த வேந்தன் ஒளிந்திருக்குமிடமோ சோழ மண்டிலத்தில் பூம்புகாரையடுத்த சில கல் தொலைவிலுள்ள ஒரு காடு. அந்தக் காட்டில்தான் பெரும்படையொன்றையும் கரிகால் சோழருக்கெதிராக அவன் தயாரித்து வருகிறான். இந்நிலையில் செழியனுக்கு நேர்ந்த கதி யாதென்று விளங்கவில்லை. என் நம்பிக்கையெல்லாம் செழியனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்காது என்பதேயாகும். நமது படை திடீரென்று, இருங்கோவேளையும் அவன் வீரர்களையும் வளைத்துக் கொண்டால்அத்தனை பேரும் செயலிழந்து விடுவார்கள். செழியனின் உயிரும் காப்பாற்றப்படும். ஆகவே, இந்தப் படையெடுப்பு மிகத் தந்திரமாக நடைபெற வேண்டும். வெற்றி கிடைத்து செழியன் உயிருடன் கிடைக்கவில்லை யென்றால் அது மாபெருந் தோல்வியே ஆகும். அதனால் ஆர்ப்பாட்டம் அதிகமின்றி இந்தப் போராட்டத்தில் குதியுங்கள். தளபதி நெடுமாறனிடம் போர் முறை பற்றிய விளக்கமனைத்தும் அறிவித்திருக்கிறேன்! அவருக்குக் கட்டுப்பட்டு வெற்றிகரமாகத் திரும்பி வாருங்கள் — வாழ்க பாண்டி மண்டிலம்!"

பெருவழுதிப் பாண்டியரின் உரை கேட்டு நின்ற வீரர்கள், "வாழ்க மன்னர்!" என முழங்கினர்.

தளபதி நெடுமாறன், அரசசிடம் விடை பெற்றுப் புறப்பட்டான். தளபதியைத் தொடர்ந்து வீரர்களும் முரசொலித்துக் கிளம்பினர். போர் வெறியால் உந்தப்பட்ட அவர்கள் மிக விரைவில் தலை நகரைத் தாண்டி பூம்புகார் செல்லும் பாட்டையில் நுழைந்தனர்.

சோழ மண்டிலத்தில் நுழையாமலேயே அந்த நாட்டைச் சுற்றிக்கொண்டு இருங்கோவேள் வாழும் காட்டில் பிரவேசிக்க வேண்டுமென்று அரசர் தளபதிக்கு உணர்த்தியிருந்தார். அந்த அறிவுரைகளைப் பின்பற்றிய தளபதி நெடுமாறன் வழி வகுத்துச் சென்று கொண்டிருந்தான்.

அந்தப் படையை வழியிலேயே சந்தித்துச் செழியன் எழுதிய ஓலையைத் தளபதியிடம் கொடுத்துவிட வேண்டுமென்ற இருங்கோவேளின் உத்தரவைத் தாங்கி வேளிர் குல வீரன் கொடுங்கோல், புறப்பட்டு விட்டான்.

அவன் குதிரையிலேறிப் புறப்படுகிற காட்சியை தன் இடத்தில் இருந்தவாறே முத்துநகை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். 'யார் இவன்? எங்கே இவ்வளவு அவசரமாகப் புறப்படுகிறான்?" என்ற கேள்விகள் அவள் உள்ளத்தில் எழுந்தன.

குதிரை நகரும் சமயம் இன்னொரு வீரன் அவனருகே வந்து, "ஏய், கொடுங்கோல்! வெற்றியோடு திரும்பு!" என்று வாழ்த்தி அனுப்பியதையும் முத்துநகையால கேட்க முடிந்தது. ஏதோ புதிய சூழ்ச்சி உருவாகிறது என்பதை மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. திரும்பினுள். தாமரை அவளை நோக்கி மகிழ்ச்சியுடன் வந்துகொண்டிருந்தாள்.

"என்னைத் தனியாக விட்டு விட்டு எங்கே போய்விட்டாய்?" என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் முத்துநகை.

"மன்னித்து விடுங்கள். எல்லாம் உங்களுக்காகத்தான்! இதோ, இந்த மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள். இது விரலில் இருந்தால் உங்களை யாரும் தடுக்கமாட்டார்கள். உங்கள் இஷ்டம்போல் சுதந்திரமாக இருக்கலாம்." என்றுள் தாமரை.

"இது உனக்கு எப்படிக் கிடைத்தது?"

"இந்தக் கேள்வியெல்லாம் எதற்கு? மருத்துவர் மூலிகைகள் பறிக்க அடிக்கடி வெளியில் செல்வார். அவரை யாரும் தடுக்காமல் இருக்க இந்த மோதிரம் வேண்டும் என்று கூறி, அமைச்சரிடம் இதைப் பெற்றுவந்தேன்."

—எனச் சொல்லிக்கொண்டே முத்துநகையின் விரலில் மோதிரத்தை அணிவித்தாள் தாமரை. அப்போது அங்கு வந்த தோழியொருத்தி அந்தக் காட்சியைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் என்றாலும், வந்த காரியத்தை மறக்காமல், "இளவரசி! தங்களை அரசியார் அழைக்கிருர்கள்," என்று கூப்பிட்டாள்.

தாமரை, முத்துநகையிடம் கண்களால் விடைபெற்றுக் கொண்டு, அரசியைப் பார்க்கப் புறப்பட்டாள். முத்துநகை அரசியையும் அந்தத் தோழியையும் மனத்துக்குள் வாழ்த்தியவாறு, மோதிரத்தைத் தடவிப்பார்த்துக் கொண்டே வேறு வழியாக வெளியே வந்தாள். குதிரைகள் கட்டப்பட்டிருக்கும் இடத்துக்கு வேகமாகப் போனுள். குதிரையை அவிழ்த்தாள்.

"யார் நீ?" என்று காவலன் ஒருவன் ஈட்டியை நீட்டியவாறு ஓடிவந்தான்.

மோதிரத்தை அவன் முகத்துக்கு நேரே காட்டினுள். காவலன் வாய்பேசாது வணக்கம் தெரிவித்து நின்றுன். முத்துநகை, குதிரையில ஏறி வெகு வேகமாகப் புறப்பட்டாள். கொடுங்கோலின் குதிரை எந்தப் பக்கம் போயிருக்குமென்று அவளால் வெகு நேரம் வரையில் யூகிக்க முடியவில்லை. ஒரு வாய்க்கால் ஓரத்தில் ஈரமண்ணில் பதிந்திருந்த குதிரையின் குளம்படிகள் கொடுங்கோல் சென்ற திக்கை அவளுக்கு அறிவித்தன. வேறு வழியில் அவன் சென்றிருக்க முடியாது என்ற நம்பிக்கையில் குதிரையைத் தட்டிவிட்டாள். காற்றினும் கடிய வேகத்தில் குதிரை பறந்தது. அவள் முயற்சி வீண்போகவில்லை. அவளுக்கு முன்னே அவன் போய்க் கொண்டிருந்தான்.

அவள் முதல்நாள் உட்கார்ந்திருந்த அதே அருவியோரம். அங்கே குதிரையை விட்டிறங்கி, கொடுங்கோல் தண்ணீர் பருகிக் கொண்டிருந்தான். முத்துநகையும் குதிரையைக் கொண்டுவந்து அங்கே நிறுத்தினுள்.

திடுக்கிட்ட கொடுங்கோல், "யார்?" என்று கர்ச்சித்தவாறு வாளையெடுத்துக்கொண்டு பாய்ந்தான்.

"நில்லப்பா! நானும் உன்னோடுதான் வருகிறேன்!" என்றவாறு முத்துநகை, குதிரையிலிருந்து இறங்கி முத்திரை மோதிரத்தை அவனிடம் காட்டி சிரித்துக் கொண்டாள். உடனே கொடுங்கோல் முத்துநகைக்குத் தலை தாழ்த்தி வணக்கம் தெரிவித்துக் கொண்டான்.

"உன் பெயர் என்ன?" முத்துநகை கேட்டாள்.

"கொடுங்கோல்!" — இதைச் சொல்லிவிட்டு அவன், முத்துநகையை ஆவலோடு பார்த்தான்.

"பயப்படாதே! அரசியாருக்கு மருத்துவம் செய்ய வந்திருக்கிறேன் நான். திடீரென்று மன்னர், என்னையும் உன்னுடன் போகச் சொல்லி உத்தரவிட்டிருக்கிருர். அவர்......உன்னிடம்......"—முத்துநகை பேச்சை முடிக்காமல், அவனிடமிருந்து பதிலை எதிர்பார்த்தாள்.

அந்த முட்டாளும், "ஆமாம்; ஆமாம். பாண்டியருக்குக் கொடுக்க வேண்டிய ஓலையைக் கொடுத்திருக்கிருர். கட்டாயத்தின்பேரில் செழியனே எழுதிய ஓலை!" என்று உளறிவைத்தான்.

"பரவாயில்லை — பத்திரமாக வைத்துக்கொள்!" என்று அவள் பதில் கூறினுளே தவிர, "என்ன ஓலையாக இருக்கும்? செழியனே எழுதியது என்கிறனே!" என்பது போன்ற குழப்பங்கள் அவள் மூளையைக் குடையலாயின.

"சரி....நேரமாகிறது...புறப்படலாம்!" என்றுள் அவள்.

கொடுங்கோலும் புறப்பட்டான். முத்துநகை, குதிரையில் ஏறிக்கொள்ளாமல், குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவாறு நடந்து கொண்டிருந்தாள். கொடுங்கோலும் அவ்வாறே அவளுடன் நடந்து கொண்டிருந்தான். அரசரின் முத்திரை மோதிரத்தையே போட்டிருக்கக்கூடிய ஒருவன் நடந்து செல்லும்போது சாதாரண வீரனுகிய அவன் மட்டும் குதிரையில ஏறிச் செல்லலாமா? நடந்து கொண்டே முத்துநகை, பேச்சுக் கொடுத்தாள்.

"நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகமில்லையா?"

"ஆமாம்! ஆமாம் !!"

"ஓலையைக் கொடுத்தால்... அந்தப் பாண்டியர்கள்..."

"படையெடுக்க மாட்டார்களாம்."

"அது தெரியும்; அது தெரியும். ஆமாம்; நீ எவ்வளவு நாட்களாக நமது மன்னரின் படையில் வேலை பார்க்கிருய்?"

"எங்க தாத்தா காலத்திலேயிருந்து எங்க குடும்பமே இருங்கோவேள் மன்னரின் படையிலேதான் இருக்கிறது!"

"ஓகோ! நீ வாள் வித்தையில் சிறந்தவன்தானு ?"

"ஏதோ கொஞ்சம் தெரியும்!"

"பார்த்தாலே தெரிகிறது, பெரிய வீரன்தான் என்று! எங்கே, உன் வாளைக் கொடு பார்ப்போம்!"

கொடுங்கோல், தன் வாளையெடுத்து மரியாதையுடன் முத்துநகையிடம் கொடுத்தான். முத்துநகை நடந்து கொண்டே அந்த வாளை வாங்கித் திருப்பிப் பார்த்தாள்.

"அதிக கனமாக இல்லையே!" —இது முத்துநகை.

"ஆமாங்க! நம் அரசர் வைத்திருக்கும் வாள்தான் அதிக கனம். கரிகால் சோழனுடைய வாளைவிட அதிக கனமானது!" —இது கொடுங்கோல்.

"ஓ! அப்படியா?" என்று கூறிக் கொண்டே முத்துநகை, கையிலிருந்த வாளைக் கொடுங்கோலின் நெஞ்சில் நுழைத்து விட்டாள். எதிர்பாராமல தாக்கப்பட்ட கொடுங்கோல் வாளிலே தன் உடலைச் சிக்க வைத்துக் கொண்டு மண்ணில் விழ்ந்தான். அவசர அவசரமாக அவன் உடைகளை ஆராய்ச்சி செய்தாள் முத்துநகை. அந்த ஓலை அவள் கையில் கிடைத்து விட்டது. எடுத்துப் படித்துப் பாத்தாள். திடுக்கிட்டாள். அவளுக்கு பயம் வேறு பிடித்துக் கொண்டது. எதிரே கிடக்கும் கொடுங்கோலின் பிணத்தை இழுத்துப் புதர் மறைவில் பரபரப்புடன் கிடத்தினுள். ஆளில்லாமல் நின்ற குதிரையை இழுத்துக்கொண்டேபோய் வேறிடத்தில் விட்டாள். தன் குதிரையில் ஏறிக்கொண்டு எங்கு போவதென்று தெரியாமல் கொஞ்சதூரம் சென்றுள்.

கொடுங்கோலைக்கொலை செய்த பரபரப்பு அவளுக்கு அடங்கவில்லை. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. இனி என்ன செய்வதென்று புரியவில்லை. போய்க் கொண்டேயிருந்தாள். அவள் திடீரென்று மகிழ்ச்சியடையக்கூடிய காட்சியொன்றை எதிரே கண்டாள். மரக்கிளையொன்றைப் பிடித்தவாறு அவளது அன்புக்குரிய வீரபாண்டி நின்று கொண்டிருந்தான். அவள் பயமத்தனையும் நீங்கிற்று. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே குதிரையிலிருந்து குதித்தாள், அவள் குதிப்பதற்குமுன் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான் இருங்கோவேள்.

"கேட்டீர்களா சேதி?" என்றுள் துடிதுடிப்புடன்!

"என்ன?" என்றுன் இருங்கோவேள்.

"ஒரு கொலை செய்துவிட்டேன்!"

"ஏன்? யாரை? எப்போது?"

"இருங்கோவேளின் ஆளை! பாண்டிய மன்னரைச் சூழ்ச்சி செய்து ஏமாற்றி, செழியனையும் அவருக்கு எதிரியாக ஆக்குவதற்கு ஒரு ஓலை தயாரித்திருக்கிருன் இருங்கோவேள்!"

"அப்படியா?"

"ஆமாம்! அந்த ஓலையைக் கொண்டு சென்ற வீரனைத்தான் நான் வழிமறித்துக் கொன்று ஓலையையும் கைப்பற்றியிருக்கிறேன்!"

"சபாஷ்!......அந்த ஓலை எங்கே?"

"இதோ இருக்கிறது—படித்துப் பர்ருங்கள் !"

இருங்கோவேள் அதைப் படிப்பதுபோல் பாசாங்கு செய்துவிட்டு திரும்ப அவளிடமே கொடுக்கப்போனுன்.

"வேண்டாம்; நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்!" என்று அவனிடமே கொடுத்தாள் முத்துநகை.

இருங்கோவேள் அந்த ஓலையைப் பத்திரமாகத் தன் மடியில் வைத்துக்கொண்டான்.



துள்ளிவரும் தமிழ் நடையழகை
அள்ளிவரும் புதிய அமைப்பு!
முத்தாரம்
'மனிதனை'ப்பற்றி உலகப் பெருமேதைகள்
தந்த பொன்மொழிகளுடன்
இதழ் - 30
விற்பனையாகிறது!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

50. பிரஷ்ய நாட்டு ஃபிரடரிக்

அன்புள்ள மாதவி,

ஐரோப்பாக் கண்டத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வல்லமைபெற்ற மன்னர்களில் பிரஷ்யநாட்டு ஃபிரடரிக்கும், ஆஸ்திரியாவை ஆண்ட அரசி மேரியா தெரிசாவும் சிறப்பானவர்கள். இருவரும் முறையே தத்தமது நாடுகளை உலகப்படத்தில் இடம்பெறச் செய்தவர்கள். முப்பதாண்டுப் போரினால் சீரழிந்து போயிருந்த பிரஷ்யாவை நிலைப்படுத்தி வாழ்வளித்தவன் ஃபிரடரிக். ஜெர்மானிய சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவாரமாக அமைந்ததே பிரஷ்ய நாடுதான். அந்தப்பிரஷ்ய நாட்டின் வலிமைக்கும் வளத்துக்கும் ஃபிரடரிக் காரணமாக இருந்ததால் ஜெர்மானிய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை அமைத்தவனே அவன்தான் என வரலாற்றில் கருதப்படுகிறான். கலாரசிகனாக, கவிஞனாக, தத்துவஞானியாக வாழ்ந்த ஃபிரடரிக், மாபெரும் படையின் தளபதியாகச் சென்று, போர்பல நடத்தி, களம்பல வென்று, பேரரசு ஒன்றை நிறுவி, வரலாற்றில் 'மா' என்ற அடைமொழியையும் பெற்றான் என்பது வரலாற்றின் சுவையான செய்திகளில் ஒன்றாகும். நெஞ்சுரம் படைத்த போர்வீரனாகவும், எதிர்ப்பட்ட நாடுகளை எரித்துச் சாம்பலாக்கும் வைரியாகவும், ஐரோப்பிய நாடுகள் அஞ்சி நடுங்க உலவிய ஃபிரடரிக், இரக்க சிந்தையும் தயாள குணமும் உடையவனாக இருந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. மனிதாபிமானம் கொண்டவனாக ஆட்சிபுரிந்தான். விவசாயம் தொழில், கல்வி ஆகியவற்றை வளர்க்க அரும்பாடுபட்டான். மொத்தத்தில் முரண்பாடுகளின் கூட்டுச் சரக்காக அவன் விளங்கினான்!

ஃபிரடரிக் மன்னன் சிறுவனாக இருந்தபொழுது தந்தையால் கொல்லப்பட இருந்தான். வாலிபனாகி பட்டத்துக்குரிய இளவரசனாகியிருந்தபொழுது, நாட்டின் அரசுரிமை இழக்கும் நிலையைப் பெற்றான். ஆனால், ஃபிரடரிக் இவற்றுக்கெல்லாம் தப்பி பிரஷ்ய நாட்டின் மன்னனானான். களத்திலே வாள் சுழற்றுவதைவிட கலைக்கூடங்களிலே புல்லாங்குழல் வாசிப்பதில் அவனுக்கு விருப்பம் அதிகம்; இராணுவ உடை அணிவதைவிட பட்டுப் பீதாம்பரம் உடுத்தி பலர் காண பவனி வருவதில் அவனுக்கு நாட்டம் அதிகம்; பிறரோடு அமர்ந்து தாய்மொழியில் உரையாடுவதைவிட தனிமையில் அமர்ந்து பிரஞ்சு இலக்கியங்களில் தன்னைமறந்து திளைக்கவே அவன் பெரிதும் விழைந்தான். நல்ல உழைப்பாளியான ஃபிரடரிக்கிடம் சோம்பலும் நிறைய இருந்தது! இருந்தபோதிலும் பேரரசனாகத் திகழ்ந்தான் அவன்; பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவியவனும் அவனேதான்!

ஃபிரடரிக் பெரும் ராணுவ நிபுணனல்ல; வெறித்தனமான நாட்டுப்பற்றும் அவனிடம் இருந்ததில்லை; பிறரைக் கட்டுப்படுத்தி வேலைவாங்கும் பேராற்றல் படைத்த தலைவனுமல்ல; இருந்தும் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்த மன்னனாக வாழ்ந்தான்!

1740—ல் பட்டத்துக்கு வந்த அவன் சுமார் அரை நூற்றாண்டு காலம், ஐரோப்பாவில் சர்வசக்தி வாய்ந்த மன்னனாக விளங்கினான். மந்திரிகளின் துணைகொண்டு அவன் ராஜ்யபரிபாலனம் செய்யவில்லை. அவன் நினைத்ததை செய்துமுடிக்கும் கருவிகளாக அவர்களைப் பயன்படுத்தினான். எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும் ஆகிய ஆணைகளிட்டான்; மந்திரிகள் செயல் பட்டனர் — அவ்வளவுதான்! நிதி, விவசாயம், வியாபாரம் போன்ற எல்லாத் துறைகளும் மன்னனின் நேரடியான கவனத்தில் இருந்தன. படைகளின் பிரதம தளபதியாகவும் அவனே விளங்கினான். அதிசயிக்கத்தக்க வகையில் உழைப்பதற்கான ஆற்றலை அவன் பெற்றிருந்தான்.

பணத்தைச் செலவு செய்வதில் மிகுந்த சிக்கனத்தைக் கையாண்டவன் அவன். படையை பலப்படுத்தமட்டுமே அவன் சற்றுத் தாராளமாகச் செலவுசெய்தான். ஆஸ்திரியாவில் அவன் பலத்தைக் கண்டு சாக்சனி, ஸ்விடன் போன்ற நாடுகள், வெள்ளம் போல் பெருக்கெடுத்து வரும் ஃபிரடரிக்கின் பலத்திற்கு அணைபோல ஒன்றாக அணிவகுத்து நின்றன. இங்கிலாந்து மட்டுமே பிரஷ்யாவின் பக்கம் ஆதரவாக இருந்தது. மேற்குறித்த நாடுகளோடு ஃபிரடரிக் ஏழாண்டுப் போர் நடத்தியபோது, ஆங்கில நாட்டின் பிரதம மந்திரி பிட், பிரஷ்யநாட்டுக்குப் பெருந்துணையாக இருந்தார். மேற்கிந்தியக் கடல்களில் பிரஞ்சுக் கப்பல் படையை ஈடுபடவைத்தது பிரிட்டிஷ் கப்பற்படை! இந்தியாவில் பிரஞ்சு காலாட்படைகளுக்கு ஆங்கிலப்படை நல்ல வேலை கொடுத்துக் கொண்டிருந்தது. ஆகவே பிரஞ்சுக்காரர்கள் தங்களின் முழு சக்தியையும் பிரஷ்யாவுக்கு எதிராக ஈடுபடுத்த இயலாமல் போயிற்று.

ஏழாண்டுப்போரால் பிரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்திருந்தாலும், எல்லைபெருகி பரப்பளவு விரிந்திருந்தாலும், போரின் விளைவுகள் பொருளாதாரத் துறையில் அந்நாட்டைப் பெரிதும் பாதித்தது. ஆனால் ஃபிரடரிக் நாட்டின் பொருளாதாரத்தைப் புனர்நிர்மாணம் செய்தான். தொழில்கள் வளர சில பிரதேசங்களுக்கு வரிகளிலிருந்து விலக்கு அளித்தான். பிரஷ்ய நாணயத்தின் மதிப்பை ஸ்திரப்படுத்த எல்லாவகையான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு அதில் வெற்றியும் அடைந்தான்.

ஃபிரடரிக்கைப் பொறுத்தவரையில் அவன் தெய்வ நம்பிக்கையில்லாதவன். மதத்துறையில் நாட்டு மக்களுக்கு சர்வசுதந்திரம் வழங்கினான். "என்னுடைய ஒரே கடவுள் என்னுடைய கடமைதான்!" என்று அவன் தன் கடவுள் கொள்கையைத் தெரிவித்தான். பத்திரிகைச் செய்திகளைத் தணிக்கை செய்து வெளியிடும் முறையை ஒழித்தான். அவனுடைய ஆட்சியில் பத்திரிகைகள் கருத்துச் சுதந்திரத்தோடு உலவின. மக்களுக்குப் பூரணமான பேச்சுரிமையை வழங்கிய மன்னன் அவன். கொடுமையான தண்டனைகளைத் தடுத்தான். மிகப் பயங்கரமான குற்றங்களுக்கே கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. 1747-ல் பிரஷ்யாவில் ஒழுங்கான நீதி பரிபாலன அமைப்பை ஏற்பாடுசெய்தான். சட்ட அடிப்படையில் வார்த்தைச் சிலம்பம் ஆடுவதை அவன் வெறுத்தான். சட்ட விமர்சனத்தைவிட நீதி வழங்குவதே பிரதானமானது என்ற உணர்ச்சியை நீதிபதிகளிடம் உண்டாக்கினான். நீதி வழங்கத் தவறிய நீதிபதிகளுக்குக் கடுமையான தண்டனை விதித்தான். அரசியலில் எந்தப் பிரச்சினையானாலும், அதை மனித உள்ளத்தோடு ஆராய்ந்தான். ஆகவே பிரஷ்ய நாட்டுமக்கள் அவனை 'மனிதாபிமானம் கொண்ட மன்னன்' என வாழ்த்தினர். வரலாறு 'மகா' என்ற அடைமொழியிட்டு அவனைக் கௌரவித்தது!

ஃபிரடரிக்கின் இல்லற வாழ்க்கை அவ்வளவு வெற்றிகரமானதாயிருக்கவில்லை, அவனுக்குக் குழந்தை ஏதும் இல்லை. தன்னுடைய தாயிடம் அவனுக்கு நிரம்ப மரியாதை இருந்தது. பிரபல பிரஞ்சு எழுத்தாளன் வால்டேருடன், ஃபிரடரிக் கடிதத் தொடர்பு கொண்டிருந்தான். வால்டேரின் எழுத்துக்கள் ஃபிரடரிக்கின் அரசியல் கொள்கையில் எந்தவித மாற்றத்தையும் உண்டாக்கியதாகத் தெரியவில்லை.

1786-ம் ஆண்டில், 74-ம் வயதில் ஃபிரடரிக் மாண்டுபோனான். அவன் இறந்தபொழுது பிரஷ்ய நாட்டு கஜானா நிரம்பியிருந்தது. பிரஷ்யநாட்டின் எல்லையைக் காக்க பயிற்சி பெற்ற இரண்டு லட்சம் போர்வீரர்கள் தயாராக இருந்தார்கள்.

உருவாகிக் கொண்டிருக்கும் ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை ஃபிரடரிக் அமைத்தான். அதன் விளைவு? உலக வரலாற்றின் போக்கில் ஒரு பயங்கரத் திருப்பம்....அது பற்றிப் பின்னர் பேசுவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

கடைசித் தடை உடையுது!

'தேர்தல் வந்துவிட்டதாமே?'—என்று பயத்தோடு கூறியவர்கள் காங்கிரஸ் வட்டாரத்தில் கிடையாது: இருக்கக்கூடாது! காரணம், என்னென்ன தேவையோ அவை அவர்களிடம் இருக்கின்றன!

பணமா?—லட்சம் வேண்டுமா? கோடி வேண்டுமா?— கொடுப்பதற்கு நான் முந்தி நீ முந்தி என்று ஓடிவர பணக்காரர், நிலத்திமிங்கலங்கள், ஆலை அரசர்கள்! பணத்தை 'அள்ளித்தருகிறேன், 'செக்'குகளைத்தந்து கொண்டேயிருக்கிறேன், எனக்குச்சொந்தமான நிலபுலன்களை உழைப்போர் பிடுங்கிட அனுமதிக்காமல் அதனை எதிர்த்துக் கூச்சல்போடு!'—என்று கூறிடுவோர் பற்பலர்!

நாட்டின் அரசியலைக் கலக்கிய ஊழல்களின் கதாநாயகர்களான முந்த்ரா போன்ற பெரும் பணக்காரர்கள் காங்கிரசுக்கு நன்கொடை தந்த நிகழ்ச்சிகள் இதற்கு சான்று கூறும்!

அதிகாரமா? அதுவும் அவர்கள் கையிலே பதினேரு ஆண்டுகாலமாக! 'கதர்ச்சட்டைகள் என்றால் மட்டும் கருணைகாட்டு! காங்கிரசில் மெம்பர் என்றால் 'பெர்மிட்'கள் 'பஸ் ரூட்டுகள் தா!' தேர்தலுக்கு எல்லா பணக்காரரையும் பயன்படுத்திக்கொள்! — ஏமாந்தால், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களையும் பயன்படுத்திக்கொள்! தேர்தலில் பணத்தை வாரி வாரி இறை! ஏழைமக்களிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு பணத்தைத் தள்ளு! சட்டம் இதைத்தடுத்ததென்றால் சட்டத்தையும் மாற்றியமைப்போம்!"

—என்ற காங்கிரசாரின் முழக்கத்தில் எல்லாப்பொருளும் புரியும். ஆனால் கடைசியில் சொன்னசட்டம்முறிப்பது தெரியாமலிருக்கலாம். அண்மையில் பாராளுமன்றத்துச் செய்தி, காங்கிரஸ் தனக்கிருந்த ஒரே ஒரு தடையை நீக்கிக் கொண்டதைப் பார்த்தால் அதுவும் புரியும்.

"எவ்வளவு செலவு செய்தாலும் தேர்தல் செலவை அரசியல் கட்சிகள் கணக்குக் காட்ட வேண்டியதில்லை!"

—இதனால் யாருக்கு நன்மை?

—உண்டியல் எடுத்துக் காசு சேர்த்துத் தேர்தலில் நிற்கும் எதிர்க்கட்சிகளுக்கா?

—கோடி கோடியாய் நன்கொடை வாங்கி தேர்தல் செலவு செய்யும் காங்கிரஸ் கட்சிக்கா?

தமிழகக் காவலர்படையின் நூற்றுண்டு விழா!

ஆகஸ்ட் 31–ம் நாள் மாலை சென்னை பாலர் அரங்கத்தில் போலீஸ் நூற்றுண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது. போலீஸ் — என்றவுடனேயே அச்சம் மூளுகின்ற நெஞ்சங்களின் சந்தேகம் தீரும் வகையில் அந்த விழா கலைமணம் கமழ நடைபெற்றது. அவ்விழாவிற்கு உள்நாட்டமைச்சர் பக்தவத்சலம் தலைமை தாங்கினர்.

ஆயுதப் போலீஸ் படையைச் சார்ந்த ப. குப்புசாமி வரவேற்புரை நிகழ்த்தினர். அவர் தமது பேச்சில் போலீசார் திரையிட்ட 'உங்கள் நண்பன்' எனும் படத்தைப் பற்றி விவரித்தார். போலீசின் கடமைகளையும், பொதுமக்கள் போலீசிடம் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றியும் எடுத்துக் கூறும் இத்திரைப் படத்திற்கான கதை வசனத்தை பிரமகுரு எம். ஏ. பி. எல். எழுதியிருக்கிருர் என்றும், நன்கு பண்பட்ட எழுத்தாளரைப்போலவே அவர் கதை அமைத்து வசனமும் எழுதியிருப்பது பாராட்டத் தக்கது என்றும், கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் செய்திருக்கிருர்கள் என்றும், அந்தப் படம், நாள், நட்சத்திரம், ஜோசியம் பார்க்காது தயாரிக்கப்பட்டது என்றும், சிறந்த நடிகர்களின் சிறந்த நடிப்பால் அது வெற்றிபெறுமென்றும் அவர் குறிப்பிட்டபோது மக்கள் கூட்டம் அவர் பேச்சை மிக நல்ல முறையில் ரசித்தது. சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, என். எஸ். கே. மதுரம், எஸ். எஸ். ராசேந்திரன், ராகினி, எம். என். ராசம், தங்கவேலு, குலதெய்வம் ராஜகோபால் முதலிய திரையுலகத்தினர் போலீசாரின் சேவையைப் பாராட்டினர்.

காவலர் படையில் நீண்ட காலம் பணியாற்றிய மூன்று போலீஸ்காரர்கள் பாராட்டப்பட்டனர். அவர்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் சார்பாக தனிப்பட்ட முறையில் மூவருக்கும் தனித்தனியே ரூ. 500 விதம் கொடுக்கப்பட்டது.

இவ்விதம் காவலர் படையின் நூற்றுண்டு விழா முதல் நாள் நிகழ்ச்சி இனிது நடந்தேறியது.

பாகப் பிரிவினை

சரவணு பிலிம்சார் வெளியிடவிருக்கும் 'பாகப் பிரிவினை'—எனும் படம் மக்களின் கலையார்வத்தை மென்மேலும் தூண்டி வளர்க்கும் வகையில் அமைந்திருக்குமாம். பல்வேறு உணர்ச்சிகளைத் தம் அழகு முகத்தில் தேக்கி, படம் முழுவதும் ரசிகர்களுக்கு நல்லதோர் கலை விருந்தளித்திருக்கிருராம் சிவாஜி கணேசன் அவரோடு எம். ஆர். ராதாவும், பி. சரோஜாதேவியும் மற்றவர்களும் நடித்திருக்கின்றனர். சோலைமலையின் கதை வசனத்தோடுகூடிய இதன் டைரக்ஷன் பொறுப்பை பீம்சிங் ஏற்றிருக்கிருர்.

நாடோடி மகன்

தமிழகத்துப் படவுலகிலேயே பெரும் வெற்றிப் படமாக நடைபோட்ட 'நாடோடி மன்னனை' அடுத்து இன்னெரு திரையோவியம் வரவிருக்கிறது. 'நாடோடி மன்னன்' கதையை இன்னும் வளர்த்து, நாடோடி மன்னனில் வரும் நாடோடி வீராங்கனுக்கு மைந்தன் ஒருவன் பிறப்பதாகவும், அவன் தந்தையைப் போலவே மாவீரனுக விளங்குவதாகவும் திரைக் கதை தீட்டியிருக்கிருர்கள். நாடோடியின் மகனைக் கதைத் தலைவனுக வைத்தியங்கும் இப்படத்திற்கு 'நாடோடி மகன்'—என்று பெயர் சூட்டியிருக்கிருர்கள். கதிரவன் பிக்சர்சார் தயாரிக்கும் இப்படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களே முக்கிய பாகமேந்தி நடிக்கிருர். கவிஞர் கண்ணதாசன் கதை, வசனம் எழுதும் இப்படத்திற்கு எம். எஸ். சுப்பையா இசையமைக்க, என். எஸ். ராமதாசு டைரக்ட் செய்கிருர். புரட்சி நடிகரின் மேற்பார்வையிலேயே இப்படம் உருவாகும்.

வ. உ. சிதம்பரனர் வரலாற்றுப்படம்!

'வாணிபத்திற்கு வந்தோம் என்றுகூறி, பின், வாளெடுத்து இந்த வளநாட்டைச் சுருட்டிக்கொண்ட வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து, 'கடல் கிழித்துக் கலம் ஓட்டிய தமிழ்ப் பரம்பரை எமதடா!' எனக் காட்ட வெள்ளையனுக்கெதிராகக் கப்பல் ஓட்டி, சிறைப்பட்டுச் செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனரின் வீரவரலாற்றைப் படமாக்கப் போகும் செய்தி அறிந்து தமிழகம் பெருமைப்படுகிறது. திருக்குறளுக்குப் புது உரை வகுத்ததூ?, வடக்கத்திப் பண்பாட்டால் தாழ்த்தப்பட்ட இனத்தின் பிரதிநிதியாக அவர் இருந்ததும், தொழிலாளர் தலைவராக அவர் திகழ்ந்ததும் அத்திரையோவியத்தில் தவருது வரும்—எனவும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிருர்கள். இந்த நல்ல பணியை பத்மினி பிக்சர்சார் ஏற்றுக் கொண்டு, படத் தயாரிப்பிற்கான திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கின்றனர்.

புஷ்கினின் இரு நாவல்கள்

உலகப் பெரும் இலக்கியங்களைத் திரைப்படமாக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது, ஹாலிவுட்டில்! ரஷ்ய நாட்டு இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய் தந்த 'போரும் சமாதானமும்'—எனும் இலக்கியத்தைத் திரையோவியமாக்கி உலகமக்களுக்கு இலக்கிய விருந்தளித்த டிலாரண்டீஸ்படத் தயாரிப்பாளர்கள், இலக்கியச் செறிவுள்ள இன்னெரு படத்தைத் தயாரித்திருக்கின்றனர். ரஷ்யநாடு உச்சிமேல் வைத்து மெச்சும் கவிஞன் அலக்சாண்டர் புஷ்கினுடைய 'தளபதியின் மகள்' புகச்சோவ்வின் புரட்சி' —எனும் இரண்டு நாவல்களைப் படமாக்கியிருக்கின்றனர்.

இந்த இரண்டு நாவல்களையும் தனித் தனியே படமாக்காதபடி ஒரே படத்தில் அந்த இரு கதைகளையும் இணைத்து ஒரே கதையாக மாற்றி திரைப்படமாக்கியிருக்கின்றனர். யூகோஸ்லாவியாவில் படமாக்கப்பட்ட இத்திரையோவியம் விரைவில் திரையிடப்படவிருக்கிறது.

நீளத்தைக் குறை!

மூன்று மணி நேரம், நான்கு மணி நேரம் என்று போட்டி போட்டுக் கொண்டு தயாரிக்கும் படங்களையும், கொடுத்த காசுக்கு எத்தனை மணி நேரம் வேண்டுமானலும் அமர்ந்து பார்க்கும் ரசிகர்களையும் பார்த்த நமக்கு ஒரு வெளிநாட்டுச் செய்தி ஆச்சர்யத்தை அளிப்பதாக இருக்கிறது.

ஆச்சர்யமூட்டும் அந்தத் திரைப்படத்தின் பெயர் 'திடயரி ஆப் அன்னி பிராஸ்' — என்பதாகும். லண்டன் வெஸ்ட் எண்ட் தியேட்டர் அந்தப் படத்தை ஓட்டிக் கொண்டிருந்ததாம். 28 நாட்களாக அந்தப் படத்திற்கு ரசிகர்களின் ஆதரவு சிறிதும் இல்லை. இதற்குக்காரணமென்னவென்று ஆராயும் போது, அந்தப் படம் மூன்று மணி நேரத்திற்குமேல் ஓடக்கூடியதாக இருந்ததாம்.

ஆகவே, ரசிகர்களின் ஆதரவு தேவையெனில், மூன்றுமணி நேரம் ஓடும் படத்தின் நீளத்தைக் குறைத்தாக வேண்டும்; படம் பார்க்கும் நேரம் மூன்று மணிக்குள்ளாக இருக்க வேண்டும்'—என நினைத்த அத் தியேட்டர் மானேஜர் படத்தைப் படத் தயாரிப்பாளருக்கே திருப்பியனுப்பி யிருக்கிருர், படத்தின் நீளத்தைக் குறைக்கச் சொல்லி!

வட்ட அரங்குகள்

நடிகனுக்கு முன்னே மக்கள் கடல் வீற்றிருக்க அவனுக்குப் பின்னே திரைச்சீலைகளும் மரச்சாமான்களும் கிடக்க நாடகம் நடைபெற்று வருகிறது இப்போது. இந்த முறையில்கூட ஒரு புது மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர், மேலை நாட்டினர்!

நடிகன், கூர்ந்து நோக்கும் ரசிகர்களுக்கு நடுவே நின்று நடிக்கக்கூடிய அளவில் வட்டமாக மேடையமைத்து, இருக்கைகளிட்டு அமைக்கப்படும் அந்தப் புதிய நாடக அரங்கத்திற்கு 'வட்டஅரங்கு' என்று பெயர். இம்முறை ரசிகர்களுக்கு அதிக உற்சாகத்தைத் தருகிறது. நடிகர்களும் அதை விரும்புகின்றனர். ஆதலால் மேலைநாடுகளில் இந்த வட்ட அரங்கிற்கு நல்ல செல்வாக்கு இருந்து வருகிறது. சென்ற பதினைந்து ஆண்டுகளாக வட்ட அரங்குகளின் தொகை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது!

மத்திய அரசுக்கு எதிர்ப்பு!

மத்திய அரசினரின் ஆதிக்கப் பிடியும், சர்வாதிகாரமும் எல்லாத் துறைகளிலும் இருப்பது போல், கலைத்துறையிலும்இருக்கிறது. பிலிம் கட்டுப்பாடு என்ற பெயரால் தென்னகத் திரைப் படவுலகத்தை வஞ்சித்து வருகிறது.

அண்மையில் அயல் நாடொன்றிற்குத் தூதுக்குழு அனுப்பும் போது, கலைத்துறையில் இருப்பவர்களை அனுப்பாதுதன்னிச்சையாக அரசினரிடம் பணிபுரிபவர்களை அனுப்பி, கலையுலகத்தின் முகத்திலே அவமானச் சேற்றை எடுத்து அப்பி விட்டது.

அதனுடைய வெறியாட்டம் தூதுக்குழுக்கள் அனுப்புவதில் மாத்திரமல்ல; நல்ல கருத்துக்களை வெட்டுவதிலும், நாட்டின் நிலை எடுத்துக் கூறும் காட்சிகளை கத்தரிக்கோல் சின்னபின்னப் படுத்துவதிலும் இருக்கிறது.

மத்திய அரசினர் கொண்டு வந்திருக்கும் புதுச்சட்டம் மேலும் கலைத்துறையை முடமாக்குவதாக அமைந்திருக்கிறது. ஆம்; ஏழ்மையை மிகைப்படுத்தியோ பிச்சை எடுப்பதைத் தொழிலாகக் கொண்டதையோ படம் எடுக்கக்கூடாது — என்று ஆணையிடும் அச்சட்டத்தை எதிர்த்துக் குரலெழுப்பியிருக்கிறது சென்னை படத் தயாரிப்பாளர்கள் சங்கம்.

சரோடி பிரதர்சாரின் 'கலையரசி' எனும் படத்தில் புரட்சி நடிகர். எம். ஜி. ஆரும் பானுமதியும் தோன்றும் காட்சி.

சுழல் விளக்கு

மாலுமி

பி. ராசு; சோழவந்தான்.

(?) கேரளாவில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் என்ன செய்கின்றன?

அமெரிக்கக் கம்யூனிச எதிரிகளின் மனமார்ந்த பாராட்டுக் கடிதங்களைப் பெற்ற வண்ணமிருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

அ. ராமையா; வத்தலகுண்டு.

(?) 'விடுதலை' தின ஏட்டின் தலைப்பில் போட்டிருக்கும் 'திராவிடநாடு திராவிடருக்கே'— என்பதற்குப் பொருளென்ன?

'திராவிடநாடு, தற்கொலை நாடு' —என்று பெரியார் பேசியிருப்பதாக அறிகிறோம். 'விடுதலை' பெரியார் அவர்களின் லட்சியத்தைப் பரப்பும் ஏடு. எனவே அவருடைய லட்சிய ஏட்டின் தலைப்பிலுள்ள வாசகத்திற்கு இப்போது நீங்களே பொருள் கொள்வது நல்லது!

பி. நாராயணன்; காங்கேயம்.

(?) முன்பு ரஷ்யாவைப் பார்த்தோம். பிறகு சீனவைப் பார்த்தோம். பின்னர் கேரளத்தைப் பார்த்தோம். இப்போது....?

வங்காளத்தைப் பாருங்கள்!

எம். ஆதீனன்; பருவக்குடி.

(?) புதுவையில் எப்படி காங்கிரஸ் வென்றது?

கள்ளரக்கன் அருளாலும், காசு பணத்தின் தயவாலும், கயமை புரிய அஞ்சாத துணிவாலும் வெற்றியைப் பலாத்காரமாக சிறை எடுத்திருக்கிறார்கள், காங்கிரசார்.

டி. பி. ஐசக்; தூத்துக்குடி.

(?) இந்திய—சீன உறவு ஏன் கெட்டுவிட்டது? இதற்கு யார் காரணம்?

இருவருமேதான் காரணம். சீன ஆதிக்கம் திபேத்தில் இருப்பதை அனுமதித்த நேரு, ஓடிவந்த தலாய்லாமாவுக்கு இங்கு ஏன் இடம் கொடுத்தார்? அப்படிக் கொடுத்தாலும், தலாய்லாமா 'நான் இருக்குமிடத்தில்தான் திபெத் அரசாங்கம் நடப்பதாகப் பொருள்' — என்று அரசு அமைத்துவிட்ட பாணியில் பேசும்வரை அவருக்கு அனுமதி கொடுத்தது ஏன்? இந்திய அரசின் விரோதியாகிவிட்ட ஷேக் அப்துல்லா சீனவில் போய் இருந்துகொண்டு, அந்த அரசாங்க ஆதரவைப் பெற்று 'நானிருக்குமிடத்தில் காஷ்மீர் அரசாங்கம் நடப்பதாகப் பொருள்' — என்று அறிக்கை விட்டால், நேருவும் காங்கிரசும் எப்படியெப்படிச் சீறுவார்கள்? கண்டனக் கணைகளை வீசுவார்கள்? ஆனால் அதே நேரத்தில், மற்ற ஒரு நாட்டின் எல்லையைத் தன்னுடையதாகக் காட்டிக் கொள்ளும் செஞ்சினத்தின் 'அநியாய ஆசை' பெரிதும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

பி. பார்த்தசாரதி; கரூர்.

(?) அமைச்சர்கள் ஏன் அடிக்கடி பதவி விலகுகிறார்கள்?

குற்றம் சாட்டப்படும்போது குற்றம் சாட்டுவதற்குரியவரையே விலக்கி மறைத்து வைத்துவிட்டால் பிறகு குற்றச்சாட்டுகள் தண்ணீர் பட்ட வெடிகள் தானே—என்ற நினைப்பில் அரசினர் கையாளும் புதுத் தந்திரம்தான் அமைச்சர்களின் பதவி விலகல்!

அழகுமுத்து; வெள்ளியூர்.

(?) நிதியமைச்சர் கொள்கைகளில் ஏதாவது மாற்றம் உண்டா?

உண்டு; வடக்காவது தெற்காவது என்று பேசி வந்தவர், தெற்கிலே ஒரு இரும்புத் தொழிற்சாலை கட்டுங்கள் — என்று வடவருக்கு வேண்டுகோள் விட்டார், முன்பு! இப்போது வடக்கு தெற்கை வஞ்சிப்பது உண்மைதான்—என்ற அளவிற்கு வந்திருக்கிறார். இனி 'தென்னகம் தனியரசாக வேண்டும், இத்தொல்லை தீர'— என்கிற அளவுக்கு வருவார்; வந்து தீர வேண்டும் — என்பது எங்களது அசையாத நன்னம்பிக்கை.

சி. கதிர்வேல்; தேனி.

(?) ஜனசங்கம் எனும் கட்சியைப் பற்றி தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

ஜனங்கள் இல்லாத சங்கம், ஜனசங்கம் என்று நினைக்கிறார்கள்.

பி. தண்டாயுதம்; சிங்கை.

(?) ரயில்வேக்களில் டிக்கெட் இல்லாப் பிரயாணம் ஆண்டுதோறும் அதிகமாகிக் கொண்டிருக்கிறதாமே; அதை ஏன் தடுக்க முடியவில்லை?

வேலியே பயிரை மேய்ந்தால் எங்கே செழுமை காணுவது? 20 பிரயாணிகளில் ஒருவர் வீதம் ரயிலில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்கின்றனராம்; இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கோடிக்கும் அதிகமாக நட்டமேற்படுகிறதாம்; இந்தக் கொடுமைக்குக் காரணம், அப்படிப் பிரயாணம் செய்கிறவர்களுக்கு இரயில்வே ஊழியர்களும் உடந்தையாக இருக்கிறார்களாம்—என்று நாம் சொல்லவில்லை; இரயில்வே துணை அமைச்சர் ஷா நாவாஸ்கானே கண்ணீர் விட்டுக்கொண்டு சொல்லியிருக்கிறார், தோழரே!

சி. சுப்பராயன்; ஆற்காடு.

(?) "தி. மு. க. வினருக்குக் கூட்டம் சேருகிறது என்றால், அது பைத்தியக்காரர்களுக்குக் கூட்டம் சேருவதற்குச் சமம்" என்று கனம் அமைச்சர் பக்தவத்சலம் பேசியிருக்கிறாரே....?

தி. மு. க. வினரைப் பற்றி எடை போடும் அமைச்சரின் இந்தப் பேச்சு அவருடைய கணக்கிலுள்ள தவறையும், அறிவுத் துலாக்கோல் ஒரு பக்கம் தேய்ந்து போனதையும் காட்டுகிறது. எந்தப் பைத்தியக்காரர்களின் பேச்சைக் கேட்டாவது, மக்கள் ஆயிரக் கணக்கில் சிறை புகுவார்களா? தடியடி படுவார்களா? துப்பாக்கிக் குண்டுகளை மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு வீழ்ந்திறப்பார்களா? பைத்தியக்காரர்களுக்கு மக்கள் மன்றம் தரும் மதிப்பை, கனம் அமைச்சர் பார்த்ததில்லை போலும்!

த. அஞ்சலை; சிதம்பரம்.

(?) பக்ரா அணைக்கட்டில் ஏற்பட்ட விபத்தினால் பிளவு நேர்ந்து விட்டதாமே?

பாரத அணைக் கட்டில் ஏற்படும் அரசியல் விபத்தையும், அதனால் விளையும் பிளவையும் லேசாக சுட்டிக் காட்டுகிறது அந்த நிகழ்ச்சி!

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக 3-வது மாநாடு

செப். 12, 13-ம் (சனி, ஞாயிறு) நாட்களில்
பூவிருந்தவல்லியில்

★

தலைவர்: தோழியர் டாக்டர்
எம். சேதுபாஸ்கரன் எம். பி., பி. எஸ்.

திறப்பாளர், தோழியர்
இராஜேஸ்வரி சண்முகம்

★

இரு நாட்களிலும்
அறிஞர் அண்ணா,
நாவலர் நெடுஞ்செழியன்
மற்றும் கழக முன்னணி வீரர்கள்
கலந்து கொள்வார்கள்.

12—9—59 சனி இரவு 10 மணிக்கு
கவிஞர் கண்ணதாசன் நடிக்கும்
புரட்சி நாடகப் பேரவையின்
குற்றம் குற்றமே நாடகம்.

13—9—59 ஞாயிறு இரவு 10 மணிக்கு
முரசொலி நாடக மன்றத்தாரின்
சொர்ணம் எழுதிய
விடை கொடு-தாயே நாடகம்.

—வரவேற்புக் குழுவினர்.

கலப்படம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

சாக்கிய முனி எனும் அந்தப் புத்தன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டான், இருந்தாலும் திருட்டுத்தனமாக நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்தான்! எந்த நாட்டில் புகுந்தாலும் உதை விழும் என்று தெரிந்த அவன், வேறு வழியில்லாமல் காடுகளில் சுற்றித் திரிந்தான். அப்படிச் 'சுற்றித் திரியும்' போதுதான் அருமையான வழியொன்றைக் கண்டுபிடித்தான்.

நாமோ நாட்டை இழந்துவிட்டோம். நாட்டை மீண்டும் பிடிக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. மதப்பிரச்சாரகனாக உள்ளே புகுந்து, மக்களின் 'வர்க்க போதனை'யைக் குலைத்து மனதைக் கலைத்து, மன வலிமை அற்றுவிடும்படிச் செய்ய வேண்டும்.

இப்படிச் சிந்தித்த பின், புத்த மதத் தலைவனாக நாட்டிற்குள் புகுந்தார். மக்களை மொட்டையடித்து மஞ்சள் துணி சுற்றி சோம்பேறியாக்கினார். மக்களும் மதத்தினால்—அதன் மயக்கத்தால் மனம் குலைந்து அவருக்கு அடிமையானார்கள். மறுபடியும் அவர் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டார்.

—இப்படி திபெத்திய மொழிப் பத்திரிகையில் வெளியிட்ட சீனர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று, "இது கதையல்ல; வரலாறு! வரலாற்று நூல்களில் தெளிவான—மிக மிகத் தெளிவான சான்றுகள் இருக்கின்றன!"

—என்று கூறுகிறார்கள்.

மக்கள் புரட்சிக்கு முன் நின்று, தோற்றோடிய புத்தர், இழந்த ஆதிக்கத்தை மீண்டும் பெற அவர் கண்டுபிடித்த வழிதான் புத்தமதம்—என்று கூறிய சீனர்கள், கடைசியாக ஒரு அருமையான பொன்மொழியையும் தந்திருக்கிறார்கள்!

"எதேச்சதிகார நிலப்பரப்புக்களின் ஒரு கருவியே சமயம். சமயப் பணிகளால் மக்களுக்கு எவ்விதப்பயனும் இல்லை!"

—இந்தப் பொன்மொழிகளை நம் பொதுவுடமைத் தோழர்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.

'புதிய புத்தன்' கதையை, கம்பர் விழாக்களில் கலந்து கொள்ளுவோருக்குக் காணிக்கையாக்குகிறோம்.

கலப்படம்

'கம்பனை — கவிச்சக்ரவர்த்தி கம்பனை—இகழ்வது நியாயமோ? அவனை இகழ்ந்தால் நாக்கு வாயிலிருக்குமோ? அவன் மகா கவி; இன்னும் சொல்லப்போனால் மகா மகா மகாக்கவி. அவன் பாடியதற்கு எதிராக ஒரு காவியம் பாடுகிறார்களாமே? அதன் பெயர் 'இராவண காவிய'மாமே? என்ன அக்ரமம்? ஸ்ரீமந் நாராயணனின் பெருமையைப் பாடும் காவியத்திற்கு ஒரு எதிர்ப்புக் காவியமா? இராம காவியத்திற்கு எதிராக இராவண காவியமா?' என்று 'அங்கலாய்த்து'க் கொண்டோர் பலர்! இதைவிட ஆவேசக் குரலில் கூவியோர் பலர். அந்த இராமாயணப் போராட்ட காலம் நம் நினைவில் அப்படியே பசுமை மாறாதிருப்பதைக் காணுகிறோம்.

கடவுள் நூலில் இவ்வளவு காமச் சேதிகளா? — என்றுதான் கேட்டோம். உடனே சிலர் கனல் கக்கினார்கள். 'வாதிட வா' — என்று அறைகூவல் விட்டார்கள். 'பேச்சுப் போருக்குத் தயாரா?'— என்று துடை தட்டி நின்றார்கள்.

சொற்போருக்குச் சென்றோம்; வென்றோம்! தோல்வியடைந்த அவர்கள் நம்மையே தொலைக்க மாநாடு கூட்டினார்கள்; மார் தட்டினார்கள்! 'இவர்களுக்குப் புதைகுழி தோண்டினாலொழிய, பதைக்கும் எங்கள் நெஞ்சு சாந்தி பெறாது' — என்று கூறினார்கள்; கடைசியில் அவர்களுக்கான புதைகுழியைத் தோண்டினார்கள்.

கம்பன் கலை—என்றும், கம்பர் தரும் காட்சி — என்றும் — ஏதேதோ சொல்லிவிற்கப் பார்த்தார்கள், அந்தப் பழஞ் சரக்கை! நேற்று சுட்ட பிட்டுகளை இன்று பொடித்துத் தூளாக்கி பட்டை, கிராம்பு, கசகசா—சேர்த்து, புதுப் பெயரிட்டு விற்கும் டீக் கடைக்காரனின் செயலைப்போல இவர்களின் செயல் என்பதை மக்கள் உணர்ந்தனர்; இவர்கள் வியாபாரம் எடுபடவில்லை!

மீண்டும் நடிகர் ஒருவரின் பால் அவர்கள் பார்வையைச் செலுத்தினர். அந்த நடிகர் நடத்திய நாடகம் இராமாயணத்தை திராவிடர் பார்க்கும் பார்வையாகும். இது ஏறத்தாழ 'இராவண காவிய'த்தைப் போன்றதே!

ஆதாரங்கள் கூறுகின்ற இராமனின் கெட்ட நடத்தைகளைத் திரை போடாமல், 'திரைக்குமுன்னிருந்து' நடத்திக் காட்டினார்.

அந்தத் 'தேவாசுரப் போராட்டத்திற்கு'—இந்த அன்பர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பு வந்தது. பத்திரிகைகள் பலமாகத் தாக்கின. அகிம்சையைத் தூர எறிந்துவிட்டு, அரிவாளும் கையுமாக நாடகக் கொட்டகையை வளையமிட்டனர். கலவரம் புரிந்தனர்; காட்டுமிராண்டிச் செயல்கள் பல புரிந்தனர். இவர்களின் செயல் மக்கள் உள்ளத்தில் பகுத்தறிவைத் தூண்டிவிட்டது. கம்ப இராமாயணம் கடவுள் நூல் எனும் நிலையை இழக்கத் தொடங்கியது!

இப்போதுதான் கம்பரைக் காப்பாற்றுவோரின் உடலில் 'சிவப்பு ரத்தம்' பாய்ந்தது; கம்யூனிஸ்ட்டுகள் பகிரங்கமாக 'பகவத் காலட்சேபம்' புரிய ஆரம்பித்தனர். 'கம்பர் கண்ட தமிழகம்'—எனும் 'ஒரே மாதிரியான பேச்சு' தமிழகமெங்கும் ஒலித்தது. 'ராம்துன்' கூட்டம் சிறிது ஆட்டம் போட்டது.

இந்த 'ராம் துன்' கூட்டத்தில் நூற்றுக்கு எழுபது பேர் சோஷலிச பாணி சமுதாயத்தை ஏற்றுக்கொள்ளும் காங்கிரசார். சிலர் கம்யூனிஸ்ட்டுகள். பொதுவாக, சீன தேசத்தின் வழிமுறையைப் பின்பற்ற நினைக்கும் கூட்டம்! ஏனெனில், அங்கும் சோஷலிசம் தானே! அங்கு சென்று திரும்பிய பின்னர்தானே 'சோஷலிசபாணி' கோஷம் எழுந்தது!

சிந்திக்கத் தூண்டும் சீனத்துப் புதுக்கதை!

இந்த 'சோஷலிச'க் கம்பர்களுக்கு இடிதரும் விதம் ஒரு சுவையான சேதி வந்திருக்கிறது. அதைப் படித்தவுடன் மூர்ச்சை போடாதிருக்கும் வழிகளை, 'இராவண காவியத்தை' எதிர்க்கும் நண்பர்கள் கடைபிடிக்க வேண்டுகிறோம்.

புத்த மதம் தோன்றிய வரலாறு நமக்குத் தெரியும்! இன்பத்தைத் தவிர வேறெதுவும் தம் மகன் அனுபவிக்கக் கூடாதென விரும்பிய மன்னன், சித்தார்த்தனுக்கு அழகு தேக்கும் மாளிகை, அப்சரஸ் போன்ற மனைவி, ஆடம்பரப் பொருட்கள், போகப் பொருட்கள் — அத்தனையும் தந்தான்; இன்ப சாகரத்தில் மூழ்கடித்தான்!

ஆனால் ஒருநாள் பரந்து கிடந்த உலகத்தில் பரவிக்கிடந்த துன்பங்களை, துயரங்களைக் கண்டான்; ஏனிந்தத் துன்பம்—என்று சிந்தித்தான்; தனிமையை நாடி ஓடினான், இனிமையைத் தந்த மனைவியையும், மகனையும் விட்டுவிட்டு! தாடிக்கார சாமியார்கள் இவனுடைய கேள்வியைக் கண்டு திகைத்தார்கள்; திணறினார்கள்! சுற்றியலைந்தான் காடு, மேடு! துன்பம் ஏன்—என்ற கேள்விக்கு விடைகண்டான்; துன்பம் ஆசையால் விளைவது; ஆசையை அறுத்தால் துன்பம் இல்லை — என்ற நல்ல முடிவுடன் நாடு திரும்பினான்.

— இப்படித்தான் கூறுகிறது புத்தரின் கதை!

ஆனால் இந்தக் கதை முழுக்க முழுக்கத் தவறு — என்றொரு குரல் எழும்புகிறது இப்போது!

எங்கே? இமயமலைச் சாரலிலே! உலகத்தின் கூரை எனப்படும் பாமீர் பீடபூமிக்கு அருகிலுள்ள நாட்டிலே!

ஆம்; செங்கொடியேந்திகளாம் சீனாக்காரர்களின் ஆதிக்கத்திலிருக்கும் திபெத்திலிருந்து அந்தக் குரல் எழும்புகிறது!

புத்தமதம் சமுதாயத்தில் மட்டுமல்ல; அரசுக் கட்டிலிலும் வீற்றிருக்கும் நாட்டில்தான் அந்தக் குரல்! புத்தன் கதை இதுவல்ல—என்று கூறும் மறுப்புக் குரல் எழுகிறது! புத்தனின் வாரிசுகளாம் 'லாமா'க்கள் ஆட்சி செய்யும் அந்தப் பனிப் பிரதேசத்தில் புத்தன் கதைக்கே மறுப்பு வந்திருக்கிறது. மறுப்போடு மட்டுமல்ல; அதற்கான மாற்றுக் கதையும் வந்திருக்கிறது. அதாவது புத்தன் கதைக்கு ஒரு 'கித்தன் கதை' வந்திருக்கிறது. கதையையே தலைகீழாக மாற்றி எழுதியிருக்கிறார்கள்! கொஞ்சம் சுவை சேர்த்துத் தருகிறோம் அக்கதையை :—

ஒரே ஒரு ஊரில்—அதாவது வடக்கே ஒரு சிற்றரசு. அதை ஆண்டு வந்த மன்னன் சுத்தோதனன். அவனுக்கு வெகு காலமாகக் குழந்தையில்லாது கடைசி காலத்தில் ஒரு 'சாதாரணக்' குழந்தை பிறந்தது. வளர்ந்து பெரியவனாகிய அந்தக் குழந்தைக்கு நாடுபிடிக்கும் 'ஆசை' உண்டாகியது. ஆசையென்றால் ஆசை, தணியாத நாட்டாசை! ஆதிக்க ஆசையால் அலைக்கழிக்கப்பட்ட அவன் ஆனை, குதிரை, சேனை அத்தனையும் திரட்டி பக்கத்து நாடுகளின் பேரில் அடிக்கடி படையெடுத்து வந்தான்.

படையெடுப்பால் நலிந்த மக்கள் கண்ணீர்விட்டனர். உடனே 'வெகுஜனக் கிளர்ச்சி' ஒன்றைத் துவக்கத் திட்டமிட்டனர். அதே சமயம் இந்த அரசனால் (சாக்கிய முனி — எனும் சித்தார்த்தனால்) பாதிக்கப்பட்ட சின்னஞ்சிறு அரசர்கள் ஒன்று கூடிப் படையெடுக்கத் திட்டமிட்டனர்.

போர் முரசு இரண்டு பக்கம் ஒலித்தது. இந்தப் புறம் 'வெகுஜன' மக்களின் பெரும்படை! அந்தப்புறம் சிற்றரசர்களின் படை! இருந்தாலும் ஆதிக்க 'ஆசை' சாக்கிய முனி போர்களத்தில் இறங்க வழிசெய்தது. போர்க்களத்தில் முழுபலத்துடன் போரிட்டார்.

இரத்த வெள்ளம் ஓடியது. 'ஆகா'—என்று எழுந்த மாகாளியைப்போலிருந்த 'வெகுஜன'ப் பட்டாளத்தின்முன் சாக்கிய முனி நிற்க முடியவில்லை. 'சட சட' வென்று முறிந்து விழுந்துவிட்டான் கொடுங்கோலனும் சாக்கிய முனி எனும் புத்தன்! 'சலசல' வென்று ஓடைகளாய் ஓடி நாடி இரத்த ஜண்டா நாட்டிவிட்டார்கள், வெகுஜன மக்கள்!

[தொடர்ச்சி பக்கம்—10]

பிச்சையோ பிச்சை!

"இந்திய சேனை பலமிக்கது!

"போர் வந்து விட்டால் அகிம்சையை எங்காவது எலி வலைக்குள் வைத்துவிட்டு, எதிரியை வளைத்துப் பிடித்து பதைக்க பதைக்க வதைப்போம்."

—இப்படி 'சண்டப் பிரசண்டம்' பேசி சண்டைக்குத் தயார்—என்று மார் தட்டிக் கொண்டிருக்கிறார்கள் நம் அரசினர்!

ஆனால் வரும் செய்திகளோ, இவர்களைப்போல் பேடிகளில்லை! புடவை கட்ட வேண்டியவர்கள் தப்பித் தவறி, துப்பாக்கி ஏந்தும் காக்கி உடைக்காரர்களாக இருக்கிறார்களோ?—என்றெல்லாம் எண்ணத் தூண்டுகின்றன.

மேற்கு பாக்கிஸ்தான் ஓரத்தில் மீண்டும் தாக்குதல்!

பாக்கிஸ்தான் படை வீரர்கள் எல்லையோர மக்களைக் கொன்றனர்!

ஆடுகளைத் திருடினார்கள்; மாடுகளை ஓட்டிச் சென்றார்கள்.

கிழக்குப் பாக்கிஸ்தான் ஓரத்தில் மீண்டும் கொள்ளை—

—இப்படித்தான் செய்தி வருகிறது! நம் பட்டாளத்தின் காலடி ஓசைகூட அந்தப் பக்கத்தில் இல்லை!

எல்லையிலே கொள்ளை!

ஆனால்—எல்லை காக்க வேண்டிய வீரர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? உள்நாட்டு இலாக்காக்கள் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்கிறார்கள்!

கிணறு வெட்டுகிறார்கள்!

வாய்க்கால் தோண்டுகிறார்கள்!

வீடு கட்டித் தருகிறார்கள்!

பாலம் போடுகிறார்கள்!

— எல்லைக் கோடுகளில் நடக்கும் அக்கிரமங்களைத் தடுக்க வேண்டியவர்கள் இங்கும் திரிகிறார்களே? ஏன்?

ஐ. நா—படத்தில் காஷ்மீர் இந்தியாவுடன் சேர்க்கப்படாத அக்ரமம்!

இந்தியப் பகுதிகளைத் தன்னுடைய தாக்கிக் காட்டும் சீனப் படம்!

—இதைக் கண்டிப்பாரில்லையே ஏன்?

அதட்டி, மிரட்டி, அச்சுறுத்த வேண்டிய பாதுகாப்பு அமைச்சர் என்ன செய்கிறார் தெரியுமா?

பறக்கும் தட்டு, பதட்டப் பேச்சுக்காரர், பேசுவதில் 'ரிக்கார்டு' ஏற்படுத்தியவர் —என்னும் பட்டம் பெற்ற போர்ப்படைகளின் அமைச்சர் இந்த இக்கட்டான வேளையில் என்ன செய்கிறார் தெரியுமா?

பிச்சை எடுக்கிறார்; பிச்சை, வெள்ள நிவாரண நிதிக்கு!

அழுத பிள்ளைக்குப் பால்—அமைச்சரானோர் வரலாறு!

எப்பொழுதும் வடக்குத் தெய்வங்களையே வணங்கித் துதிக்கும், முரட்டுக் கதர் உடுத்திய மோன குருசாமிகளாக விளங்கி வருபவர்கள்தான், நம் குறையை எடுத்து விளக்கிடுவர் என நாம் அனுப்பும் எம். பி.க்கள்! செல்பலர்கள், மக்கள்சபை உறுப்பினர்—என்ற பட்டத்தைத் தாங்கியவுடன் அவர்களுக்குக் கடந்த காலமும், நாடு கடந்து நாம் ஏன் டில்லி வந்திருக்கிறோம்—என்ற எண்ணமும் மறைந்து விடுகிறது. அந்த டில்லி நாயகர்களையும், அவர்களின் சபாமண்டபத்தையும் பார்த்த உடனேயே உள்ளம் வியர்க்க விறுவிறுக்க கொத்தடிமை—குடியடிமைகளாய் இருந்திட அவர்களுக்கு முறிச்சீட்டு எழுதித் தந்து முணுமுணுப்பையும் பெரு மூச்சையும் கூட அடக்கிக்கொண்டு வாழ்கிறார்கள், தென்னகத்துக் காங்கிரஸ் பிரதிநிதிகள்.

முந்தரா ஊழல் போன்ற அரசாங்கத்தின் அடிக்கல்லையே பெயர்த்தெடுக்கும் பிரச்சினைகளை அன்றாடம் மக்கள் சபைக்குக் கொண்டு வந்து காரசாரமாகப் பேசும் துணிவு மிக்க வடநாட்டு காங்கிரஸ் எம். பி.க்களையும் காணுகிறோம்.

மூட்டைப்பூச்சி நேற்றைக்கு விட இன்றைக்கு அதிகமாகக் கடிப்பதேன்?—என்று பக்கத்திலிருக்கும் மெம்பரைக் 'குசுகுசு' என்று கேட்டாலுங்கூட பண்டித நேருவுக்குத் தெரிந்து விடுமோ; அவருடைய 'எரிக்கும் பார்வை' தம்மீது திரும்பி விடுமோ என்று பயந்து நடுநடுங்கிப் பேசாமல் அடங்கிக் கிடக்கும் தென்னகத்துக் காங்கிரஸ் எம். பிக்களையும் காண்கிறோம்.

அப்படித் தப்பித்தவறி அதிகமாகப் பேசுபவர்களின் கதியையும் காணுகிறோம். கட்சியிலிருந்து விலக்கி விடுவார்கள்; அல்லது உயர்பதவி தந்து வாயை அடக்கி விடுவார்கள். இந்த இரண்டு வழிகளில் ஒன்றைத்தான் வட நாட்டு அதிகார வர்க்கம் கடைப் பிடிக்கிறது, தென்னகத்தைப் பொறுத்தவரை!

மைசூருக்கும் சேலத்திற்கும் ஒரு இருப்புப் பாதை போட வேண்டும்—என்று அந்தக் காங்கிரஸ் எம். பி. அடிக்கடி வற்புறுத்தி வந்தார்.

டில்லி நாயகர்கள் திகைத்தார்கள்; திணறல் அவர்களை ஆட்கொண்டது. ஆச்சரியத்தால் பேச்சற்ற நிலையடைந்தார்கள்! தென்னாட்டுக்காரன் ஒருவன் பேசுகிறானா? — தன் தொகுதித் தேவையை சபையில் எடுத்துச் சொல்கிறானா? அவ்வளவு நெஞ்சுத் துணிவா அவனுக்கு?

இந்தக் கேள்விகளை ஆளவந்தார்களின் முகம் பிரதிபலித்தது. என்றாலும் அந்தத் தென்னகத்துக் காங்கிரஸ்காரர் விட்டாரில்லை! தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தார்! தொல்லை தந்துகொண்டேயிருந்தார்! கண்டனம் கூடச் செய்தார்!

இவருடைய தொல்லைகளைப் பொறுக்கமுடியாத அரசினர் இதற்கோர் முடிவு கட்டப் புறப்பட்டனர். அவரது வாய்க்குப் பெரும் பூட்டு ஒன்று போடத் தீர்மானித்தனர்.

அதன்படியே பூட்டும் போடப் பட்டது! என்ன ஆச்சரியம்! இதுவரை 'சேலம்–பெங்களூர் ரயில் பாதை போடவேண்டும்' —என்று ஜபித்துக் கொண்டிருந்த அவரது வாய் ஓய்ந்தது. அவரது கோரிக்கைகள், கண்டனங்கள் அத்தனையும் மறைந்தன.

இத்தகைய சக்தி பெற்றதா அந்தப் பூட்டு என வியக்கலாம்! ஆம்; அந்தப் பூட்டின் பெயர் பதவி; மந்திரிப் பதவி!

ரயில் பாதைக்காகக் கூக்குரல் கிளப்பியவருக்கே ரயில்வே துணையமைச்சர் பதவி தரப்பட்டது! அந்தக் கூக்குரலும் அடங்கிற்று! ரயில்பாதை நினைப்பும் மறைந்தது!

இப்படி டில்லியின் ராஜதந்திரத்தை விளக்கும் உதாரணமாகவிருப்பவர் சேலத்தைச் சார்ந்த எஸ். வி. ராமசாமி எனும் தற்போதைய ரயில்வே துணை அமைச்சர்!

இந்த உதாரணம் அவரோடு நின்றுவிடவில்லை; மேலும் தொடர்கிறது!

'இந்தி ஆட்சிமொழி ஆகக் கூடாது!'—என்று எதிர்ப்புத் தெரிவித்து, அரசினரைக் கடுமையாகத் தாக்கி வந்த சுப்பராயனுக்கு இப்போது பூட்டு! அழுத பிள்ளைக்குப் பால் கிடைத்திருப்பதுபோல் மந்திரிப் பதவி அவருக்குக் கிடைத்திருக்கிறது! மக்கள் சபையில் சேலத்துக்காரர் கோரிக்கை வைத்தார்; தொடர்ந்து கூக்குரல் எழுப்பினார்; மந்திரி பதவி கிடைத்தது; கோரிக்கைகளை வீசி எறிந்து மௌன நிலையடைந்த போல் சுப்பராயனும் தன் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு விடுவாரா? பதவியே சதம் என்று இருப்பாரா?

★ செப்டம்பர் 15! ★

இருட்டறையில் ஒளிவிளக்கு ஏற்றி வைத்த எழுத்து வேந்தர் - விடுதலை விடிவெள்ளி - எழுச்சி முரசம் -

எங்கள் அண்ணா

50-ம் ஆண்டு
பொன்விழா மலர்

உங்கள் கரங்களை அழகு படுத்தும்.

★ 'முரசொலி' வெளியிட்ட எந்த மலரும் ஏமாற்றம் தந்ததில்லை!

★ ஈடு இணையற்ற முயற்சியே முரசொலியின் தனிப்பண்பு!

★ அண்ணா பொன்விழா மலரை எத்துணை எழிலோடு முரசொலி வழங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

★

★ அண்ணாவின் இயற்கை வண்ண முகப்போவியம்-

★ எழில் குலுங்கும் எண்ணற்ற புகைப்படங்கள்-

அரசியல் வித்தகர்கள் -
இலக்கியச் சிற்பிகள் -
கலையுலகக் காவலர்கள் -

எல்லோருமே எழுதுகிறார்கள்!

விலை ரூபாய் ஒன்றுதான்!

...உயர்ந்த முறையில்...மலர் வருகிறது!

இப்போதே விற்பனையாளர்களிடம் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ராஜிநாமா…

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அளிக்கப்பட்ட ஊதியத் தீர்ப்பு பற்றிய பிரச்சனையின் விளைவாகவே கிரி பதவி துறக்க நேரிட்டது.

1956-ல் பொருளாதார அமைச்சர் டாக்டர் தேஷ்முக் மொழிவழி இராஜ்ய அமைப்பு குறித்து எழுந்த பம்பாய் மாநில புனரமைப்பு சிக்கல் காரணமாக ராஜிநாமா செய்தார். 1955-ல் வெளியான இராஜ்ய புனரமைப்புக் குழுவின் அறிக்கை மராட்டியம், குஜராத், பம்பாய் நகரம், சௌராஷ்டிரம், கட்ச், பழைய மத்திய இராஜ்யத்தின் சில பகுதிகள் கொண்ட இரண்டு மொழி பம்பாய் மாநிலம் அமைக்க சிபாரிசு செய்திருந்தது. பம்பாய் நகரத்தை உள்ளடக்கிய தனி மராட்டிய ராஜ்யம் மொழி அடிப்படையில் மட்டில உருவாகவேண்டும் என மராட்டியர்கள் கிளர்ந்தெழுந்தனர். இக்கிளர்ச்சியின் விளைவாக பம்பாய் நகரத்தில் மட்டும் மொரார்ஜி தேசாயின் நிர்வாகத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் கொடுமையாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஜவர்கர்லால் நேருவோ தினம் ஒரு திட்டமாக பேசித் தீர்த்து மேலும் குழப்பத்தை அதிகம் வளர்த்தார். பம்பாயைப் பொறுத்த மட்டில் ஐந்துவிதமான திட்டங்களை நேரு எடுத்து விளக்கினார்.

இந்தப் பெருங் குழப்பத்தை தேஷ்முக்கால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவரோ பம்பாய் நகரம் உள்ளடங்கிய மராட்டிய மாநிலத்தை விரும்பினார். பம்பாயில் நிகழ்ந்த வெறி பிடித்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நீதிமன்ற விசாரணையையும் தேஷ்முக் கோரினார். அமைச்சரவை முறைப்படி நடப்பதில்லை—நேரு தன்னிச்சைப்படி திட்டங்களை, கொள்கைகளை வெளியிடுகிறார் என்றும் குற்றஞ்சாட்டி தேஷ்முக் பேசினார். ஆக, பம்பாய் நகரம் உள்ளடங்கிய மராட்டிய ராஜ்யம் மலர, துப்பாக்கிப் பிரயோகத்திற்கான நீதி மன்ற விசாரணை நடைபெற, அமைச்சரவைக் கூட்டம் முறைப்படி நிகழ தேஷ்முக் ராஜினாமா செய்தார்.

பின்னர் வந்த பொருளாதார காங்கிரஸ் அமைச்சர் கிருஷ்ணமாச்சாரி முந்திரா ஊழல் காரணமாக பதவியிலிருந்து விலக நேரிட்டது யாவரும் நன்கறிவர்.

கடைசியாக சென்ற திங்களில் அமைச்சர் ஜெயின் அவர்கள் உணவுக் கொள்கையின் விளைவாக பதவி துறக்கும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு ஒன்பது மந்திரிகள் பல்வேறு காரணங்களுக்காக பதவி துறந்ததுடன், பதவி விலகலின் போது சிந்தனைக்குரிய பல கருத்துக்களையும் வெளியிட்டனர். குறிப்பாக கிரியின் பதவி விலகல், மத்தாயின் இராஜினாமா, தேஷ்முக்கின் பதவித் துறப்பு, அம்பேத்காரின் பதவி விலகல் மிக முக்கியமான பிரச்சினைகளை விளக்கும் அரசியல் நடவடிக்கைகளாகும்.

கொண்ட கொள்கைக்காக நேர்மையான ஜனநாயக அரசு நடைபெற அவர்கள் முயற்சித்தனர். எனவே, அமைச்சர்களின் பதவித் துறப்பை பொதுமக்கள் எண்ணிப் பார்த்து அவர்கள் விளக்கும் பிரச்சனைகளை எல்லாம் ஆராய்ந்து நல்லரசு நடைபெற ஆவன செய்தால்தான் நல்லவர்கள் பதவி விலகுவதிலே பொருளிருக்கும்!

பதவி விலகல் ஜனநாயக சம்பிரதாயம் என்ற ஒரு காரணத்திற்கு மட்டுமல்ல என்பதை அறிந்து இந்தியத் துணைக்கண்டத்தில் நிகழ்ந்த பதவி விலகல் நிலைமைகளை தெரிந்து விழிப்புடன் பொது மக்கள் இருப்பது ஜனநாயகக் கடமையாகும்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.